Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 113 | சனிக்கிழமை 19 மார்ச் 2022 | பங்குனி 05 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

**கொரோனா**
நேற்று 288
மொத்தம் 6,57,723

**உயிரிழப்பு**
நேற்று 03
மொத்தம் 16,422

## தங்கம் ரூ.160,000

கொழும்பு, மார்ச் 19
நாட்டில் தங்கத்தின் விலை நேற்றுப் புதிய உச்சத்தை அடைந்தது. இதன்படி ஒரு பவுண் தங்கத்தின் விலை ஒரு 15

## பால்மா ஒரு கிலோ ரூ.1,945

கொழும்பு, மார்ச் 19
இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பால் மாவின் விலை ஆயிரத்து 345 ரூபாவிலிருந்து ஆயிரத்து 945 ரூபா 15

## வருகின்றது டீசல்!

யாழ்., மார்ச் 19
யாழ்ப்பாணத்தில் உள்ள பெருமளவான எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு டீசல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 15

# மக்கள் தள்ளாட்டத்தில் நாமலோ உல்லாசத்தில்!

*சமூக ஊடகங்களில் விமர்சனக் கணைகள்*

கொழும்பு, மார்ச் 19
எரிபொருள், மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்காக மக்கள் கடும் வெயிலுக்குள் நீள் வரிசையில் காத்திருக்க, இலங்கையின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரான நாமல் ராஜபக்ச, மாலைதீவில் நீர் விளையாட்டுக்களில் ஈடுபடும் காணொலி சமூகவலைத் தளங்களில் வைரலாகியுள்ளது.
மாலைதீவிலுள்ள நீர்விளையாட்டுகளின் பயிற்றுவிப்பாளர் ஒருவர், நாமல் ராஜபக்சவின் புகைப்படத்தை 15




## காய்ச்சல், வயிற்றோட்டம் 9 மாத பெண்குழந்தை நேற்றுமுன்தினம் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 19
காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம் காரணமாக 9 மாதப் பெண் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது. 15



**முச்சந்தி முரளி**

"நிபந்தனை விதிச்சதை வெளியில சொல்லக்கூடாதென்டும் ஒரு நிபந்தனையை இந்தியா வைச்சிருக்கு போல!"

# கடனுக்கில்லை நிபந்தனை!

## நிதியமைச்சர் பஸில் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 19**

**கடன் வழங்குவதற்கு இந்தியா எவ்வித நிபந்தனையையும் முன்வைக்கவில்லை. இலங்கைக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என இந்தியப் பிரதமர் உறுதியளித்துள்ளார் என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.** 15



## மண்ணெண்ணெயும் வருகின்றது இன்று

விவசாயம், மீன்பிடிக்கு முன்னுரிமை

யாழ்ப்பாணம், மார்ச் 19
யாழ்ப்பாணத்தில் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மண்ணெண்ணெய் இன்று வரவுள்ளது. அவற்றை 15



## வலி. தென்மேற்கு சபையில் யாசகம் எடுத்துப் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 19
வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் நேற்றைய அமர்வின்போது, சண்டிலிப்பாய் பிரதேச வட்டார உறுப்பினர் இராஜேஸ்வரன் பிச்சைக்காரன் வேடமிட்டு யாசகமேந்திப் போராட்டத்தில் ஈடுபட்டார். 15

## வவுனியா சிறையில் கைதி தப்பியோட்டம்

வவுனியா, மார்ச் 19
வவுனியா சிறைச்சாலையிலிருந்து கைதி ஒருவர் நேற்று அதிகாலை தப்பியோடியுள்ளார் என்று பொலிஸார் 15

## இலங்கைக்கு உதவும் வேலைத்திட்டம் 'ரெடி'

நாணய நிதியம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 19
இலங்கைக்கு உதவி வழங்கும் வேலைத்திட்டம் தொடர்பில் இலங்கையுடன் கலந்துரையாடல்கள் ஆரம்பிக் 15

## சீனாவுக்கான கடனை செலுத்தமுடியா நிலை

கொழும்பு, மார்ச் 19
சீன அரச வங்கிகளுக்கு இம்மாதம் 21ஆம் திகதி செலுத்தவேண்டிய கடன்களின் தவணைக் கட்டணங்களை 15



கிளிநொச்சியில்

## மினி சூறாவளி வீடுகள் சேதம்

கிளிநொச்சி, மார்ச் 19
கிளிநொச்சி மாவட்டத்தில் செல்வாநகர், கிருஷ்ணபுரம் உள்ளிட்ட சில இடங் 15

## சபுஸ்கந்த மீண்டும் மூடல்!

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்புநிலையம்கால வரையறையின்றி மீண்டும் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
நாட்டில் நிலவும் மசகு எண்ணெய் தட்டுப்பாடு காரணமாக சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் காலவரையறையின்றி மூடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதற்கு முன்னரும் மசகு எண்ணெய் பற்றாக்குறைகாரணமாகஇரண்டு தடவைகள் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

ஜனாதிபதி செயலகத்தை சுற்றிவளைத்து

## ஜே.வி.பியின் இளைஞர் படை நேற்றுப் பெரும் போராட்டம்!

மனுவையும் தீயிட்டுக் கொளுத்தியது

கொழும்பு, மார்ச் 19
ஜனாதிபதி செயலகத்தை சுற்றிவளைத்து, ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவிருந்த மனுவை தீயிட்டுக் கொளுத்தி ஜே.வி.பியின் இளைஞர் அணி நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், ஜனாதிபதி செயலகம் முன் கூட்ட 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச மருத்துவமனைகள் அடுத்த வாரம் முடங்கும்

## மருத்துவ அதிகாரிகள் ஒன்றியம் எச்சரிக்கை

**கொழும்பு,மார்ச் 19**

**அரச மருத்துவமனை மருத்துவர்கள் உள்ளிட்ட ஊழியர்களுக்கு எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியாவசிய மருந்துகளை வழங்காவிடில், அடுத்த வாரத்திலிருந்து, அனைத்து அரச மருத்துவமனைகளும் மூடப்படும் நிலை உருவாகும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் ஒன்றியம் எச்சரித்துள்ளது.**



இது தொடர்பில் அதன் தலைவர் மருத்துவர் ருக்ஷான் பெல்லன தெரிவிக்கையில்;

வாகனங்களில் பணிக்கு வரும் மருத்துவர்கள், மருத்துவமனை ஊழியர்களுக்கு எரிபொருள் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகள் மற்றும் ஊழியர்களுக்கு எதிர்காலத்தில் உணவு சமைப்பதற்காக சமையல் எரிவாயு பிரச்சினையும் ஏற்படலாம்.

நோயாளிகளுக்கு விநியோகிக்க மருந்துகளும் இல்லை. இந்தப் பிரச்சினைகளை அரச அதிகாரிகள் கண்டு கொள்வதில்லை. இந்த நிலைமை தொடர்ந்தால் ஒட்டுமொத்த மருத்துவமனை அமைப்பும் முடக்கப்படும். அரசு மருத்துவமனை சேவையை அத்தியாவசிய சேவையாக்குவது பயனற்றது - என்றார். (ஒ-4,இ)

# எரிபொருள் வரிசைக்கு தற்காலிகமான தீர்வு

கொழும்பு,மார்ச் 19



நாட்டிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஏற்பட்டுள்ள நீண்ட வரிசைக்கு தற்காலிமாக தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக கொழும்பிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும், பெற்றோல் மற்றும் டீசல் ஒரு பௌசர் வீதம் விநியோகிக்குமாறு அமைச்சர் காமினி லொக்குகே உத்தரவிட்டுள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நிலவும் நீண்ட வரிசையை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாட்டில் எரிபொருள் விநியோகத்தைத் துரிதப் படுத்துவதற்காக விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கும் அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதேவேளை உலக சந்தையில் எரிபொருள் விலைக்கு அமைய இலங்கையிலும் எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்படுமா? என்ற கேள்விக்கு, அது தொடர்பில் பேச்சு இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஒ-4,இ)



கொழும்பு மாவட்டத்தின் உறுகொட்டாவ எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்வதற்காக 2 கிலோ மீற்றர் நீளமான வரிசையில் காத்திருந்த பெண் ஒருவர் மயங்கிச் சரிந்துள்ளார். *படம் : மஞ்சுள தயான்சா*

# எரிவாயு விநியோகம் மீண்டும் வழமைக்கு

கொழும்பு,மார்ச் 19

சமையல் எரிவாயுவை விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று முதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

எரிவாயுவைத் தாங்கிய கப்பல்களுக்கான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ள நிலையில், எரிவாயு இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

3 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிவாயு அடங்கிய கப்பலில் உள்ள எரிவாயுவை, கெரவலப்பிட்டியில் தரையிறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனவே சமையல் எரிவாயுத் தட்டுப்பாடு எதிர்வரும் சில தினங்களில் குறைவடையலாம்.

நாளொன்றுக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் வீட்டு சமையல் எரிவாயு கொள்கலன்களை, சந்தைக்கு விநியோகிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஒ-4,இ)

# டீசல் இல்லாததால் வெள்ளை வானில் கடத்தமாட்டார்கள்

கொழும்பு, மார்ச் 19

"படிக்கிற வயசில வரிசையில நிக்கிறேனே? இது நியாயமா?" இவ்வாறு கொட்டாஞ்சேனை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக வரிசையில் நின்ற சிறுவன் ஒருவன் கேள்வி எழுப்பியுள்ளான்.

அதே எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசையில் நின்ற மேலும் சிலர் கருத்துத் தெரிவிக்கையில்;

காலை 8 மணியிலிருந்து வரிசையில் நிற்கின்றோம். மண்ணெண்ணெய் இல்லை என்று சொல்கிறார்கள். அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கின்றது? மண்ணெண்ணெய்க்கு இங்கு வரிசையில் நின்றால் அங்கு எரிவாயு சிலிண்டரைப் பெற்றுக்கொள்ள முடியாது. எல்லாவற்றுக்கும் வரிசை என்றால் எங்கு போய் நிற்பது?, என்று ஒருவர் கேள்வி எழுப்பினார்.

வயதான பெண் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்; வரிசையில் நேற்றும் பல மணி நேரம் காத்திருந்தோம். ஆனால் மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை. இன்றும் காத்திருக்கின்றோம். இன்று இல்லாவிட்டால் நாளையிலிருந்து வீட்டில் சமையல் செய்யக்கூட மண்ணெண்ணெய் இல்லை. கடையிலும் உணவு வாங்கமுடியாது. அவர்களும் கடையை மூடிவிட்டார்கள். நாங்கள் நம்பித்தானே இந்த அரசாங்கத்துக்கு வாக்களித்தோம். என்ன கறுமம் இது. எங்கட வயிற்றில் எரியும் நெருப்பு அவர்களைச் சும்மா விடாது.

'அவர் (கோத்தாபய) இரண்டரை வருசம் செய்ததே போதும். இதுக்கு மேல என்ன செய்ய இருக்கு?' என்று இன்னுமொருவர் கேள்வி எழுப்பினார்.

'இந்த ஆட்சியாளர்களைப் பற்றி குறை சொன்னால் வெள்ளை வான் வைத்து தூக்குவார்கள். ஆனால் இப்போது வெள்ளை வானில் கடத்துவதற்கு அவர்களுக்கும் டீசல் இல்லை. நாங்கள் கருத்துச் சொல்ல பயப்படமாட்டோம்' என்று இளம் ஆண் ஒருவர் தெரிவித்தார். (ஒ-5)

# நுவரெலியாவில் புத்தாண்டு விழா

கொழும்பு, மார்ச் 19

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இம்முறை நுவரெலியாவில் சித்திரைப் புத்தாண்டு விழா இடம்பெறுகின்றது என வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சி.பி. ரத்நாயக்கா தெரிவித்தார்.

நுவரெலியா கிரிக்கெட் சங்கத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட பிறீமியர் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆரம்ப நிகழ்விலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்த விழாவுக்கு வருகைதரும் உல்லாசப் பயணிகளுக்கு பாதுகாப்பு அளிப்பது பொலிஸாரின் கடமையாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.நிகழ்வில் நுவரெலியா பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசாத் ரணசிங்கவும் கலந்துகொண்டார். (ச-ரி1)

# யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் 20 புதிய சதொச நிலையங்கள்

## அமைச்சர் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 19

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 20 புதிய சதொச விற்பனை நிலையங்களைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கைத்தொழில் வர்த்தகத்துறை சம்பந்தமான கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

உணவுப் பற்றாக்குறை மற்றும் உணவுத் தட்டுப்பாட்டை நீக்கும் முகமாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் புதிதாக சதொச விற்பனை நிலையங்களை விரைவில் திறக்கவுள்ளோம். இதனால் பொது மக்கள் அத்தியாவசியப் பொருள்களை தங்குதடையின்றிப் பெற்றுக் கொள்ளமுடியும். அத்துடன் இங்குள்ள உணவுக் களஞ்சியசாலைகளில் அத்தியாவசியப் பொருள்களைச் சேமித்து, சதொச விற்பனை நிலையங்களுக்கு வழங்குவதன் மூலம் பொதுமக்கள் இலகுவாக அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

1930 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட அபாயகரமான பொருளாதார நிலையே தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ளது. கொரோனா காரணமாக பல வல்லரசு நாடுகளும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது இயற்கை விவசாய முறையை மக்கள் பயன்படுத்தத் தொடங்கியதன் காரணமாக விவசாய உற்பத்தியில் பெரிதாகப் பாதிப்பு ஏற்படவில்லை.

உணவு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலமே நாட்டில் உணவுத் தட்டுப்பாட்டைக் கட்டுப்படுத்த முடியும் - என்றார். (ஒ-4,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரத்தில் 3 நாள்கள்

# அத்தியாவசியப் பொருள்கள் யாழ்ப்பாணத்துக்கு விநியோகம்

### அமைச்சர் பந்துல உறுதியளிப்பு

**யாழ்ப்பாணம்,மார்ச் 19**
**கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படும் அத்தியாவசியப் பொருள்கள் போதுமானதாக இல்லை என்று அதிகாரிகள் வர்த்தக அமைச்சரிடம் எடுத்துரைத்தனர்.**



யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன யாழ். நகரில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையத்தைப் பார்வையிட்டார். இதன்போது வாரத்துக்கு இரண்டு தடவைகளே அத்தியாவசியப் பொருள்கள் வந்து சேர்கின்றன. அவை மக்களுக்கு விநியோகிக்கப் போதுமானதாக இல்லை என்று அதிகாரிகள் எடுத்துக் கூறினர். இதற்குப் பதிலளித்த வர்த்தக அமைச்சர், வாரத்தில் மூன்று தடவைகள் அத்தியாவசியப் பொருள்கள் கிடைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். (ஒ-4-இ)



## சதொசவில் ஒரே நாளில் மாயமாகும் பொருள்கள்

### அமைச்சரிடம் மக்கள் நேரடியாக முறைப்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச் 19
யாழ்ப்பாணத்திலுள்ள சதொச விற்பனை நிலையங்களுக்கு வந்துசேரும் அத்தியாவசியப் பொருள்கள் மறுநாள் காலையில் மாயமாகின்றன என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் மக்கள் முறையிட்டுள்ளனர்.
யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த வர்த்தக அமைச்சர் மற்றும் கடற்றொழில் அமைச்சர் அடங்கிய பிரமுகர்கள், சாவகச்சேரியில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையத்தில் கண்காணிப்பை மேற்கொண்டனர். இதன்போதே பிரதேச மக்கள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தனர். (ஒ-4-இ)

## வடமாகாணத்திலிருந்து பனம் கள் ஏற்றுமதி

### வர்த்தக அமைச்சர் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19
வடக்கு மாகாணத்தில் ஏற்றுமதியை ஊக்குவிக்க கோரிக்கைகள் விடுக்கப்பட்டால், பனம் கள்ளை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன உறுதியளித்துள்ளார்.
யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த அமைச்சர் தலைமையிலான குழுவினர் நாவற்குழி உணவுக் களஞ்சியசாலை மற்றும் சதொச விற்பனை நிலையங்களைப் பார்வையிட்டனர்.
இதன் பின்னர் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,
தற்போதைய சூழ்நிலையில் வர்த்தகத்துறை அமைச்சு நாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் ஏற்றுமதியை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அந்தந்தப் பிரதேசங்களின் ஏற்றுமதிகளைச் செயற்படுத்தத் தயாராக உள்ளோம்.
பனங்கள் உற்பத்திக் கிராமம், பனங்கட்டி உற்பத்திக் கிராமம், கடலட்டை உற்பத்திக் கிராமம் போன்றவற்றை உருவாக்குவது தொடர்பான கோரிக்கைகள் எமது அமைச்சுக்குக் கிடைக்கப்பெற்றால், நாங்கள் அவற்றுக்கு ஆதரவளிக்கத் தயார்.
தற்போது நமது நாட்டுக்கு ஏற்றுமதியே கட்டாய தேவை. குறிப்பாக வடக்கில் ஏற்றுமதி குறைவாகக் காணப்படுகின்றது-என்றார். (ஒ-4-26)

# நாவற்குழி உணவுக் களஞ்சியசாலையை குடாநாட்டுக்கான களஞ்சியமாக மாற்றுக!

### வர்த்தக அமைச்சர் உத்தரவு

யாழ்ப்பாணம்,மார்ச் 19
நாவற்குழி உணவுக் களஞ்சியசாலையை, உடனடியாகப் புனரமைத்து குடாநாட்டுக்கான அத்தியாவசியப் பொருள்களைச் சேமித்து விநியோகம் செய்யும் களஞ்சியமாக மாற்றுமாறு, களஞ்சியசாலை ஆணையாளருக்கு வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன உத்தரவிட்டார்.
யாழ். மாவட்டத்துக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்ட அமைச்சர், நாவற்குழி உணவுக் களஞ்சியசாலையைப் பார்வையிட்டார்.
இதன்போது "ஒரே கூரையின் கீழ் அனைத்து அரச அங்காடிகளும்" என்ற அடிப்படையில் நாடுமுழுவதும் அமையவுள்ள "ரஜவாச" பல்பொருள் விற்பனை நிலையமாக இதனையும் மாற்றுமாறு, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கோரிக்கை விடுத்தார்.
அதனை ஏற்றுக்கொண்ட அமைச்சர், அதற்குரிய பணிகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தல்களை வழங்கினார். அமைச்சர் பந்துலவுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்டச் செயலர் க. மகேசன் மற்றும் வர்த்தக அமைச்சின் அதிகாரிகளும் சென்றிருந்தனர். (ஒ-4-இ)




**போனகிழமை, வீணாப்போன தமிழ் எம்.பி ஒராளின்ர இசகு பிசகான போட்டோக்கள், ஸ்கிரீன் ஷொட்டுக்கள் எல்லாம் வைரலாகுதெண்டு பட்சி சொன்னதெல்லோ. அந்தப் படங்கள் எப்பிடி வெளியில கசிஞ்சது எண்ட சங்கதி இப்பதான் வெளியில வந்திருக்கு.**

**அவா ஒரு நேர்சரி ரீச்சர். தனக்கு நிரந்த வேலை ஏதும் தரச்சொல்லி இந்த எம்.பியிட்ட எதார்த்தமா அவா கேக்கப்போக, எம்.பியும் பதார்த்தமா பார்க்க, கடும் நெருக்கம் வந்திட்டுது. ஏழெட்டு லொட்ஜீகளில ரூம் போடுற அளவுக்கு நெருக்கம் எண்டா பாருங்கோவன். ஆனால் இந்த சுகபோகத்தை விட ரீச்சருக்கு மனமில்லை. அதால தன்ர கணவரையும், பிள்ளைகளையும் விட்டுட்டு வந்திட்டா. ஆனால் எம்.பி அவாவை இரண்டாம் தாரமாக் கட்ட சம்மதிக்கேலை. அதால அவரின்ர வீட்ட போய், அங்க இருந்தவையிட்ட சில ஆதாரங்களைக் காட்டி, தனக்கும் அவருக்கும் உள்ள தொடர்பை போட்டுடைச்சுப் போட்டா. அதால எம்.பி வீட்டில கனநாளாவே பெரும் புகைச்சல்.**

**அதுக்குப் பிறகு ரீச்சரிட்ட இருந்த ஆதாரங்களை அழிக்கச் சொல்லி எம்.பி கேட்டும், அவா அழிக்கேலை. அதால எம்.பி ஒரு வேலை செய்தார். 'ரீச்சரின்ர போனில பயங்கரவாதத்தை ஊக்குவிக்கிற விசயங்கள் இருக்கு' எண்டு சொல்ல வேண்டிய இடத்துக்குச் சொல்ல, ஒருநாள் கொழும்பில இருந்து வந்த ரீம், ரீச்சரை வழியில பிடிச்சு, போனைப் பறிச்சுக் கொண்டு போய் சோதிச்சுட்டு பொலிஸிட்ட குடுத்திருக்கு. பொலிஸ் பெரியவரும் எம்.பியும் கடும் ஐக்கியம். அவர் ரீச்சரைக் கூப்பிட்டு, 'இதில உள்ளதையெல்லாம் அழிச்சாத்தான் வெளில விடுவம்' எண்டு சொல்ல, அவாவும் அழிச்சிட்டா. அதுக்குப் பிறகுதான் எம்.பி.க்கு நிம்மதி.**

**ஆனால் ஆடின காலும், பாடின வாயும் சும்மா இராது எண்ட மாதிரி எங்கட எம்.பியாலும் சும்மா இருக்க முடியேலை. அதுக்குப் பிறகும் ரீச்சரோட லொட்ஜீகளுக்கு போயிருக்கிறார். அப்பதான் ரீச்சர் பிளான் பண்ணி, எம்.பி. குப்புறக்கவிண்டு குறட்டை விடுற நேரம் பார்த்து, இந்தப் படங்களை கிளிக்கிப் போட்டா. அதுகளையும், அவர் தன்னோட சட் பண்ணின ஸ்கிரீன் ஷொட்டுகளையும் தனக்குத் தெரிஞ்ச ஒராளிட்ட குடுத்து அதை வைரலாக்கி, தன்ர பழிவாங்கும் வைராக்கியத்தை எம்.பிக்கு ரீச்சர் காட்டிப் போட்டா. பாவம், எம்.பிதான் கள்ளனுக்கு தேள் கொட்டின மாதிரி ஒளிச்சுத் திரியிறாராம். அவரிட்ட வேலை கேட்டுப் போறவை கொஞ்சம் கவனமா இருங்கோ!**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் பொருளாதார நெருக்கடி

# ஏதிலிகள் ஊடுருவலாமென தமிழகத்தில் கண்காணிப்பு

**கொழும்பு, மார்ச் 19**

**இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதை அடுத்து, ஏதிலிகள் ஊடுருவக்கூடும் என்ற சந்தேகத்தில், தமிழகம், கேரளாவிலுள்ள கரையோரப் பகுதிகளில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

போர்க்காலத்தைப் போன்று, தற்போதைய காலத்திலும் பெருமளவான ஏதிலிகள் தமிழகத்தை நோக்கி வரக்கூடும் என்று இந்தியா கருதுகின்றது.

இதனால் இலங்கைப் 'பொருளாதார ஏதிலிகள்' தொடர்பில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக தமிழகப் பொலிஸார் விசேட பொறிமுறையை உருவாக்கியுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ஒ-4-இ)

## நல்லாட்சி அரசிருந்தால்

# ●பெற்றோல் ரூ.130
# ●டீசல் ரூ. 126

### சம்பிக்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 19

நாட்டின் தற்போதைய அரசின் பிழையான முகாமைத்துவத்தால் மக்கள் வாழ்வதற்கே உரிமையற்றவர்களாக உள்ளனர். நல்லாட்சி அரசு இருந்திருந்தால் மக்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் மக்கள் காத்திருக்கின்றனர். உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்துள்ள நிலையில், எமது நாட்டில் விலைஉச்சம் தொடர்கின்றது. நல்லாட்சி அரசு இருந்திருந்தால் பெற்றோல் 130 ரூபாவாகவும், டீசல் 126 ரூபாவாகவுமே இருந்திருக்கும். எரிபொருளுக்காக அரசு மக்களிடம் வரி பெறுகின்றது. இதனை மக்கள் உணர்ந்து கொள்ளமுடியும். மக்களின் வருமானம் மிகவும் குறைவடைந்துள்ள நிலையில் அரசு இலாபம் ஈட்டிக்கொள்கின்றது. தற்போது எரிபொருள் அல்லது மசகு எண்ணெய் கொண்டுவருவது போல் இலங்கை தொடர்ந்து செய்ய முடியாது. அதற்காக நிலையான வேலைத்திட்டம் நாட்டுக்குத் தேவையாகும். இன்று அனைத்துக்கும் வரிசையில் நிற்கும் மக்கள் முன்னுக்கு வந்து, தங்களின் வாழும் உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டும் -என்றார். (ஒ-4-இ)

## தேசியப் பொறிமுறை ஊடாகவே உள்நாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு

### ஐ.நாவில் வலியுறுத்தினோம் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



உள்நாட்டு யுத்தத்துடன் தொடர்புடைய வழக்கு விசாரணைகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களுக்கும் தேசியப் பொறிமுறையின் ஊடாகத் தீர்வினைப் பெற முடியும் என்பதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வலியுறுத்தியுள்ளோம் என்று நீதித்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கையின் உள்ளக சட்ட பொறிமுறைமையின் கீழ் நீதியை நிலைநாட்ட முடியும் என்பதை ஐ.நா.வில் வலியுறுத்தியுள்ளோம்.

எந்தவொரு நாடாக இருந்தாலும் 30 ஆண்டு கால யுத்தத்தினை எதிர்கொள்ளும் போது ஒரு தரப்பினர் மாத்திரமின்றி சகல மக்களும் பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிடும். நாட்டிலுள்ள அனைத்து மக்களும் இதனால் பாதிக்கப்பட்டனர் என்பதை தரவுகளுடன் நாம் மீண்டும் மீண்டும் அவர்களிடம் சுட்டிக்காட்டியுள்ளோம். வடக்கில் குண்டுகள் வெடித்தன, கிழக்கில் முஸ்லிம் மக்கள் துரத்தப்பட்டனர், தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி யுத்தம் செய்தனர். இவை அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டு பல விடயங்கள் இடம்பெற்றமையை நாம் இதன் போது தெளிவுபடுத்தினோம். அத்தோடு இது ஒரு தரப்பினரை மாத்திரம் இலக்குவைத்து முன்னெடுக்கப்பட்ட யுத்தம் அல்ல என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தோம்.

கடந்த காலங்களில் மாங்குளம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிரதேசங்களில் புதிய நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் முதன்முறையாக உயர்நீதிமன்ற நீதியரசர் நியமிக்கப்பட்டுள்ளார். நீதிவான் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் வழக்கு விசாரணைகளும் முறையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய அனைத்து பிரச்சினைகளுக்கும் தேசியப் பொறிமுறையின் கீழ் உள்நாட்டு சட்ட ஏற்பாடுகளுக்கமைய தீர்வு காண முடியும் என்ற நிலைப்பாட்டை தெரிவித்துள்ளோம் -என்றார். (ம)

## எரிபொருள் நிலையத்தில் மோதல்; பெண்கள் உள்ளிட்ட மூவர் கைது

கொழும்பு, மார்ச் 19

எரிபொருள் நிரப்பு நிலைய வளாகத்தில், இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் இரண்டு பெண்கள் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கெஸ்பேவ - பண்டாரகம வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசையில் காத்திருந்த சந்தர்ப்பத்தில், ஏற்பட்ட வாய்த்தர்க்கம், கைகலப்பாக மாறியுள்ளது.

சம்பவத்தில் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் தாக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-4-இ)

## பாடசாலை மாணவர்களுக்கான உணவு முறைமையில் மாற்றம்?

கொழும்பு, மார்ச் 19

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவு முறைமையில் மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது அனைத்து பொருள்களதும் விலை அதிகரித்துள்ள நிலையில், உணவுக்காக ஒதுக்கப்படுகின்ற மதிப்பீட்டுத் தொகையை அதிகரிக்க வேண்டியுள்ளது. இது தொடர்பில் கல்வி அமைச்சுடன் பேச்சு நடத்த வேண்டியுள்ளது என்று பாடசாலை கட்டமைப்பு மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

# எரிபொருள் விலை இனிக் குறையாது

### பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உறுதி

கொழும்பு, மார்ச் 19

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்துள்ள போதிலும், இலங்கையில் எரிபொருள் விலையைக் குறைக்க முடியாது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக எரிபொருள்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. இதனால் நட்டமும் ஏற்பட்டது. தற்போது கச்சா எண்ணெய் விலை 100 டொலர் வரை குறைந்துள்ளது. இவ்வாறான பின்னணியில் எரிபொருள் விலையைக் குறைக்க முடியாது என்று கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, உக்ரைன்-ரஷ்யா இடையே போர் வெடித்துள்ள நிலையில், கடந்த வாரம் சர்வதேச சந்தையில் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை 130 அமெரிக்க டொலராக உயர்ந்தது. இதனால் இலங்கையில் அனைத்து வகையான எரிபொருள்களின் விலைகளும் சடுதியாக உயர்வடைந்தன. (ஒ-4-இ)

## கொள்ளைச் சம்பவங்கள் அதிகரிக்கவில்லையாம்

### கூறுகின்றார் பொலிஸ் பேச்சாளர்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் கொள்ளைச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன என்று பொய்யான பரப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதில் எந்த உண்மையும் இல்லை என்று பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

சிறப்பு அங்காடிகளையும், வீடுகளையும் உடைத்து பொருள்களை கொள்ளையிடும் சம்பவங்கள் சில பிரதேசங்களில் பதிவாகியுள்ளன. அவ்வாறான குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை சீதுவ மற்றும் மாலம்பே பிரதேசங்களில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களில் வயோதிபர் இருவர் கொலை செய்யப்பட்டனர். அவர்களது வீட்டிலிருந்த தங்கநகைகள் மற்றும் பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டன. அதைப் போன்று நாட்டின் பல பிரதேசங்களில் அங்காடிகளை உடைத்து பொருள்கள் திருடப்பட்டன. இவ்வாறான சம்பவங்கள் வடக்கு மாகாணத்திலும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கக் கிளை இன்மையால் மண்ணெண்ணெய்க்கு அலைவு

சாவகச்சேரி, மார்ச் 19

**சாவகச்சேரி நகர் கிராம அலுவலர் பிரிவில், பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் கிளை இல்லாமையால், குடும்ப அட்டையுடன் மண்ணெண்ணெய் வாங்குவதற்கு மக்கள் அலைந்து திரிகின்றனர்.**

தற்போது கூட்டுறவுச் சங்கங்கக் கிளைகளால், குடும்பத்துக்குத் தலா 2 லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுகின்றது.

சாவகச்சேரி நகரப் பகுதிக்கான முதலாம் இலக்கக் கிளை, டச்சு வீதியில் நீண்ட காலமாக தனியார் கட்டடமொன்றில் இயங்கி வந்தது.

கட்டட உரிமையாளர் கட்டத்தை மீளக்கோரியமையால், கடந்த வருடம் கிளை மூடப்பட்டது. இடப்பிரச்சினை காரணமாக இன்னமும் பிரிவில் கிளை திறக்கப்படவில்லை.

எனினும் கிளையால் விநியோகிக்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் வேறு கிளைக் கடைகளில் விநியோகிக்கப்படுகின்றன.

தற்போது மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெற்றுவரும் நிலையில், சாவகச்சேரி நகரப் பகுதி மக்கள் மண்ணெண்ணெய் கொள்வனவு செய்ய கிளைகளுக்கு அலைந்து திரிகின்றனர்.

இது தொடர்பாக சங்கப் பொது முகாமையாளருடன் தொடர்புகொண்டு கேட்டபோது. சங்கத்தின் 23 கிளைகளில் தற்போது 19 கிளைகள் இயங்கி வருகின்றன.

சங்க எல்லைக்குட்பட்ட குடியிருப்பாளர்கள் அருகிலுள்ளஎந்தவொருகிளையிலும் தமது குடும்ப அட்டையைச் சமர்ப்பித்து, மண்ணெண்ணெய் பெற முடியும். சங்கத்துக்குக் கிடைத்த மண்ணெண்ணெய் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் மீளக் கிடைத்த பின்னரே இரண்டாம் கட்ட விநியோகம் இடம் பெறும் -என்றார். (ஒ-4-9)





டேவிட் பீரிஸ் குழுமத்தின் டி.பி.எம்.சி திருத்தகமும் மற்றும் உதிரிப்பாக விற்பனை நிலையத்தின் திறப்பு விழா கடந்த புதன்கிழமை கொக்குவிலில் இடம்பெற்றது. சம்பிரதாய நிகழ்வுகளுடன் ஆரம்பமான இந்த விழாவில் டேவிட் பீரிஸ் குழுமத்தின் தலைவர் டேவிட் பீரிஸ் மற்றும் உயர் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ம-14)

## தாய்மாரின் தியாகங்களை அரசு திசைதிருப்ப முயற்சி

### செல்வம் எம்.பி. கண்டனம்



கொழும்பு, மார்ச் 19

தாய்மார்களின் தியாகங்களை இந்த அரசாங்கம் பணத்தைக் கொடுத்து திசைதிருப்ப நினைக்கிறது என்று தெரிவித்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர் களின் தாய்மார்கள் தங்களுடைய பிள்ளைகளுக்காகப் பல வருடங்களாகப் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட தங்களுடைய பிள்ளைகளுக்கு என்ன நடந்தது அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்று கூற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பலவருட காலங்களாகப் போராட்டங்களை நடத்திவருகிறார்கள். இந்தநிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு அமைச்சர் டலஸ் அழகப்பெரும காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பத்தின ருக்கு ஒரு லட்சம் ரூபா இழப்பீடு தருவதாக அறிவித்துள்ளார்.

பல வருடங்களாக தங்களுடைய பிள்ளைகளுக்காகவும் கணவன்மாருக்காகவும் போராடி வரும் தாய்மார்களுக்கு இந்த இக்கட்டான சூழ்நிலையில் பணத் தைக் கொடுத்து அவர்களுடைய போராட்டத்தைத் திசைதிருப்ப வேண்டாம் என்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றேன்.

முடிந்தால் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கு இருக்கின்றார்கள்? என்ற உண்மை யைக் கண்டுபிடித்து அந்தத் தாய்மார்களின் ஏக்கங்களைத் தீர்த்து வையுங்கள். ஓர் உயிரின் பெறுமதி ஒரு லட்சமா? மனிதாபிமானமற்ற நடவடிக்கையில் இலங்கை அரசு செயற்படுவதை ஏற்க முடியாது. இதே நிலைமை சிங்கள மக்களுக்கு நடந்திருந்தால் அவர்களிடம் இந்தப் பதிலைக் கூறமுடியுமா? - என்றார். (ம-213)

## வடக்கு மாகாணத்தில் பதவி நிலை அரச அலுவலர்கள் சின்னம் அணிதல் கட்டாயம்

### ஆளுநர் பணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

வடக்கு மாகாண பதவி நிலை அரச அலுவலர்கள் அனைவரும் சின்னம் அணிந்த நிலையிலேயே கடமையாற்ற வேண்டுமென்று வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சுற்றறிக்கை மூலம், சகல திணைக்களங்களின் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

கடந்தமாதம் இந்த அறிவிப்பு விடுத்தபோதும், சில அரச நிறுவனங்களில் கடமையாற்றும் பதவி நிலைத்தர அலுவலர்கள் சின்னம் இன்றிக் கடமை யாற்றுகின்றனர்.

சேவை நாடிவரும் மக்கள் சின்னம் அணிந்த அரச அலுவலர்களை இனங்கண்டு இலகுவாக சேவைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

எனவே பதவி நிலைத்தர அலுவலர்கள் சின்னம் அணிந்தவாறு கடமை யாற்றுவதை திணைக்களத் தலைவர்கள் உறுதிப் படுத்த வேண்டுமென்றும் ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார். (ஒ-4-50)

## மன்னாரில் புத்தாண்டுச் சந்தை

மன்னார் ஹற்றன் நஷனல் வங்கிக் கிளையால் இலத்திரனியல் கொடுப்பனவை ஊக்குவிக்கும் வகையிலும், உள்ளூர் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தும் வகையிலும், மன்னார் பஜார் பகுதியில் புத்தாண்டுச் சந்தை கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

இதில் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து விதமான உள்ளூர் உற்பத்திப் பொருள்களும் கண்காட்சிக்கு வைக்கப்பட்டதுடன், மலிவு விற்பனையும் இடம்பெற்றது.

நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல், மன்னார் ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய முகாமையாளர் (விற்பனை) ரி.நிஷாந்தன் மற்றும் வங்கிப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-4-56)



# மிருகங்களை விட தமிழர்கள் தரம் தாழ்ந்தவர்களா?

### அமைச்சரவைத் தீர்மானம் தொடர்பில் சுரேஷ் கேள்வி

இலங்கையில் ஆடு, மாடுகளுக்கான விலை இலட்சக்கணக்கில் இருக்கின்றபோது ஒரு மனித உயிருக்கு ஒரு இலட்சம் ரூபா இழப்பீடு என்பதிலிருந்து சிங்கள ஆளும் வர்க்கத்தினர், தமிழ் மக்களை எவ்வளவு தூரம் கிள்ளுக் கீரைபோல எடைபோடுகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் திருவிழாக்[illegible] அல்லது [illegible] தொலைந்து போனவர்கள் அல்லர். இராணுவத்தினரதும் பொலிஸாரினதும் வேண்டுகோளுக்கிணங்க சரணடைந்தவர்களும், இராணுவச் சுற்றிவளைப்புகளின்போது பலபேர் முன்னிலையில் கைது செய்யப்பட்டவர்களும் இராணுவத்தினரின் கோரிக்கைக்கிணங்க உறவினர்களால் கையளிக்கப்பட்டவர்களும் இதில் அடங்குவர்.

இவர்கள் படைத்தரப்பினரால் கொலை செய்யப்பட்டார்களா? என்ற அச்சம் அவர்களின் உறவினர்கள் மத்தியில் நிறையவே இருக்கின்றது.

ஆகவேதான் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சர்வதேச விசாரணை ஒன்றைக் கோரி நிற்கின்றார்கள். ஆனால், சர்வதேச அழுத்தம் காரணமாக இறப்புச் சான்றிதழைக் கொடுத்து இந்த விவகாரத்தை முடித்து விடலாம் என்று அரசு யோசிக்கின்றது. சர்வதேச விசாரணை நடக்கும் பட்சத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நீதியும் கணிசமான அளவு இழப்பீடும் கிடைக்க வாய்ப்பிருக்கின்றது.

இலங்கைத்தீவின் சம பங்காளிகளான தமிழ்மக்களின் உயிர்களையே மதிக்கத் தெரியாத இலங்கை அரசிடமிருந்து தமிழ் மக்கள் அச்சமின்றியும் கௌரவத்துடனும் வாழ்வதற்கான நிரந்தர அரசியல் தீர்வு, மூன்றாம் தரப்பின் தலையீடு இன்றி சாத்தியமற்றது என்பது தெளிவாகின்றது -என்றுள்ளது. (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு-கேது பெயர்ச்சி

## 21.3.2022 முதல் 8.10.2023 வரை



**ராகு-கேது பெயர்ச்சி, வாக்கிய பஞ்சாங்கத்தின்படி எதிர்வரும் 21ஆம் திகதி பிற்பகல் 3.02 மணிக்கு பெயர்ச்சி ஆகிறார். இதில் ராகு ரிஷபத்தில் இருக்கும் கார்த்திகை 2ஆம் பாதத்திலிருந்து மேடராசியில் இருக்கும் கார்த்திகை 1ஆம் பாதத்துக்கும், கேது விருச்சிகத்தில் இருக்கும் விசாகம் 4ஆம் பாதத்திலிருந்து, ஜென்ம ராசியான துலாம்ராசி விசாக நட்சத்திரம் 3ஆம் பாதத்துக்கும் பெயர்ச்சியாக உள்ளார். திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி பிற்பகல் 1.38 மணியளவில் ராகு - கேது பெயர்ச்சி நிகழ்கிறது.**

புதுமையாக சிந்திக்கும் மனமும் பூப்போல புன்னகை பூக்கும் முகபாவமும், எடுத்த காரியத்தை எப்படியாவது முடித்துவிடும் அபார சக்தியும் கொண்ட மேட ராசியினரே உங்களுக்கு 21.3.2022 முதல் 8.10.2023 வரை உள்ள காலகட்டங்களில் ராகுவும், கேதுவும் இணைந்து எப்படிப்பட்ட பலன்களைத் தரப்போகிறார்கள் என்பதை பார்ப்போம்.

இதுவரை உங்கள் ராசிக்கு இரண்டாவது வீட்டில் உட்கார்ந்து கொண்டு மனப்போராட்டங்களையும் வீண் அலைச்சலையும், காரியத் தடைகளையும் கொடுத்து வந்தார் ராகுபகவான். இனி அந்த நிலைமாறும். அவர் இப்போது உங்கள் ராசிக்குள்ளேயே வந்து அமர்வதால், படபடப்பான உங்கள் பேச்சில் இனி முதிர்ச்சி தெரியும். உங்களை சிலர் அவமதித்துப் பேசினாலும் தக்க பதிலடி தருவீர்கள்.




குடும்பத்தில் அவ்வப்போது வாக்கு வாதங்கள் வந்தாலும் ஒற்றுமை பாதிக்காது. பிள்ளைகளின் உடல் நிலை சீராகும். அவர்களின் வருங்காலத்தை மனதில் கொண்டு முக்கியமான முடிவுகளை எடுப்பீர்கள். அவர்களுக்குப் படிப்பின்மீது இருந்த அலட்சியம் மாறும். பணவரவு அதிகரிக்கும். என்றாலும் சேமிக்க முடியாதபடி செலவினங்களும் துரத்தும். சிலருக்குத் தலைச்சுற்றல், முன்கோபம் அதிகரிக்கும். உணர்ச்சி வேகத்தில் தவறான முடிவுகளை எடுக்கவேண்டாம்.

**21.3.2022 முதல் 22.5.2022 வரை:** சூரியனின் கார்த்திகை நட்சத்திரம் 1ஆம் பாதத்தில் ராகு செல்வதால், இக்கால கட்டத்தில் வீட்டில் நல்லது நடக்கும். பிள்ளைகளால் சமூக அந்தஸ்து உயரும். அவர்களின் கல்வி, வேலை, திருமண முயற்சிகள் வெற்றியடையும். அயல்நாடு செல்லும் வாய்ப்பும் உண்டாகும்.

**23.5.2022 முதல் 29.1.2023 வரை:** சுக்கிரனின் பரணி நட்சத்திரத்தில் ராகு செல்வதால் மனைவி வழி உறவினர்களிடம் இருந்த மனஸ்தாபங்கள் நீங்கும். விலகிச்சென்ற சொந்தபந்தங்களும் இனித் தேடி வருவார்கள். நெடுநாள் கனவான வீடு, வாகனம் வாங்கும் திட்டம் நிறைவேறும்.

**30.1.2023 முதல் 8.10.2023 வரை:** கேதுவின் அச்சுவினி நட்சத்திரத்தில் செல்கிறார். இக்காலகட்டத்தில் உடல் நலக் குறைகள், சிறுசிறு விபத்துகள், ஏமாற்றங்கள், இழப்புகள் மற்றும் உறவினர்கள் மத்தியில் மனக்கசப்புகள் வந்து நீங்கும்.

**வியாபாரத்தில்:** வியாபாரத்தில் மற்றவர்கள் சொல்கிறார்கள் என நம்பி பெரிய முதலீடுகளைப் போட்டு நட்டப்படாதீர்கள். இருப்பதை வைத்து லாபம் சம்பாதிக்கப் பாருங்கள். போட்டியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**உத்தியோகத்தில்:** உங்களின் கடின உழைப்புக்கு ஓர் அங்கீகாரம்கூடக் கிடைக்கவில்லையே என்று வருந்தினீர்களே, இனி உங்களின் திறமையை அனைவரும் உணர்வார்கள். தடைபட்ட உரிமைகளும், சலுகைகளும் உடனே கிடைக்கும்.

இதுவரை உங்கள் ராசிக்கு எட்டில் உட்கார்ந்து கொண்டு நிம்மதி இல்லாமலும், சரியான தூக்கமில்லாமலும் துரத்தியடித்த கேதுபகவான் இப்போது ராசிக்கு ஏழாவது வீட்டில் அடியெடுத்து வைப்பதால், உங்கள் ஆழ்மனதில் இருந்த பயம் விலகும். எதிர்ப்புகள் அடங்கும். குறைக் கூறியவர்கள் புகழ்ந்து பேசுவார்கள்.

உங்களிடம் மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். பிரபலங்களின் அறிமுகமும் கிடைக்கும். பிள்ளைகளின் வருங்கால நலனுக்காக முக்கிய திட்டங்களை தீட்டுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்துழைப்பார்கள்.

**கேதுபகவானின் நட்சத்திர சஞ்சாரம்!**

**குருவின் விசாகம் நட்சத்திரத்தில்:** 21.03.2022 முதல் 24.09.2022 வரை கேதுபகவான் விசாகத்தில் செல்வதால் எதிர்பார்த்த வகையில் பண உதவியுண்டு. வீட்டில் மங்கல இசை முழங்கும். பிள்ளையில்லாமல் தவித்துக் கொண்டிருந்த தம்பதியருக்குக் குழந்தைப் பாக்கியம் கிட்டும். பெரிய பதவிகள் தேடி வரும்.


**ராகுவின் சுவாதி நட்சத்திரத்தில்:** 25.09.2022 முதல் 04.06.2023வரை கேதுபகவான் சுவாதியில் செல்வதால் வீண்அலைச்சல், காரியத் தடைகள், ஏமாற்றம் வந்து போகும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகளை நிதானமாகக் கையாளுங்கள்.

**செவ்வாயின் சித்திரை நட்சத்திரத்தில்:** 4.6.2023 முதல் 8.10.2023வரை கேதுபகவான் சித்திரையில் செல்வதால் பிரமுகர்களின் அறிமுகம் கிடைக்கும். பழைய நண்பர்கள் தேடி வருவார்கள். தாழ்வு மனப்பான்மையிலிருந்து விடுபடுவீர்கள். வாகனம் வாங்குவீர்கள்.

7 ஆம் வீட்டில் கேது அமர்வதால் வியாபாரத்தில் போட்ட முதலை எடுப்பதற்கே பல போராட்டங்களைச் சந்திக்க வேண்டி வரும். பங்கு தாரர்களுடன் கருத்துமோதல்கள் வெடிக்கும். வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பேசுங்கள். வேலையாள்களிடம் தொழில் ரகசியங்களை வெளியிடவேண்டாம்.

உத்தியோகத்தில் பதவியுயரும். மேலதிகாரியை பகைக்கவேண்டாம். உயரதிகாரிகள் வற்புறுத்தினாலும், நீங்கள் நேர்ப்பாதையில் செல்வது நல்லது. வேலைச் சுமை அதிகரிக்கும்.





வவுனியா ஸ்ரீகருமாரியம்மன் ஆலயத்தின் இரதோற்சவம் அடியார்களின் அங்கபிரதட்சணம் , காவடிகள் மற்றும் தீச்சட்டி ஆகியவற்றுடன் பக்தர்கள் சூழ கடந்த 16 ஆம் திகதி சிறப்பாக இடம்பெற்றது. (ஒ-14,110)

# மகாலிங்கேஸ்வரரில் எண்ணெய்க்காப்பு

முல்லைத்தீவு, மார்ச் 19

கொக்குத்தொடுவாயில் அமைந்துள்ள மகாலிங்கேஸ்வரர் ஆலயத்தில் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சுமார் 38 ஆண்டுகளாக சீரமைப்பின்றிக் காணப்பட்ட குறித்த ஆலயத்தை கொக்குத்தொடுவாய் மக்கள் இணைந்து சீரமைப்புச் செய்து ஆலயத்தில் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வை நடத்தினர்.

நிகழ்வில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-14,246)



பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில்

# சுகாதார நடைமுறைகளுடன் பங்குனித் திங்கள் உற்சவம்

யாழ்ப்பாணம்,மார்ச் 19

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் பங்குனித் திங்கள் உற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகும் தொடர்ந்து எதிர்வரும் 28ஆம் திகதி, ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி, 11 திகதி ஆகிய தினங்களில் அதிகாலை 5 மணி தொடக்கம் இரவு 9.30 மணிவரை உற்சவங்கள் இடம்பெறும்.

பக்தர்கள் பொங்கல், பூசை, அர்ச்சனை, நேர்த்திக்கடன் வழிபாடுகளை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ள முடியும். சமையல் செய்வோர், உணவு பரிமாறுபவர்கள் கொரோனாத் தடுப்பூசியை முழுமையாகப் பெற்றிருத்தல் அவசியம். உற்சவ கால தற்காலிக கடைகளுக்கான அனுமதி இன்று முற்பகல் 10 மணிக்கு ஆலய வளாகத்தில் வழங்கப்படும்.

வர்த்தகர்கள், பணியாளர்கள் கொரோனாத் தடுப்பூசி மூன்றையும் பெற்றிருத்தல் அவசியம். சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலுக்கமைவாக வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும். உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ ஆலயத்தின் பெயரால் நிதி, பொருள் சேகரிப்பதற்கு ஏற்பாடுகளுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்று ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மீண்டும் ஒரு பிரிப்புச் சதி?

ஒருவாறாக இலங்கைக்கான கடன் உதவி இந்தியாவால் வழங்கப்பட்டிருக்கின்றது. இதற்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஒரு நாடு இன்னொரு நாட்டுக்கு கடன் வழங்கும்போது, அந்த நாட்டை அதன் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்காக மாத்திரம் கடன் வழங்குவதில்லை. மறுபுறத்தில் தனக்கான இலாபம் என்ன என்பதைக் கணக்குப்போட்டே அதனை வழங்கும்.

இந்தியா, இலங்கையிடமிருந்து என்னென்னவற்றை எதிர்பார்க்கும் என்பதெல்லாம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். தனது பொருளாதார மூலோபாய நலன்களை உறுதிப்படுத்துவதையே இந்த ஒப்பந்தத்தின் ஊடாக இந்தியா மேற்கொண்டுள்ளது. இலங்கையும் எந்த எதிர்ப்பும் இன்றி அந்த ஒப்பந்தத்தை முன்னெடுக்கின்றது.

இந்தியாவின் பொருளாதார நலன் சார் முதலீடுகளில் பெரும்பாலானவை தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கை மையமாக வைத்தே அமையவுள்ளன. அவ்வாறான பொருளாதார முதலீடுகள் வெளிப்பார்வைக்கு தமிழர்களுக்கு நன்மை பயப்பதைப்போலவும் தோன்றக் கூடும். ஆனால் எல்லா முதலீடுகளும் எமது தேசத்துக்கு ஏற்றவையா என்பதையும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

வடக்கு மாகாணசபை இயங்குநிலையில் இருந்தபோது, வடக்குக்கான முதலீட்டுத் திட்டங்களில் சுற்றுச்சூழல் பாதிப்புக் குறித்துக் கூடுதல் கரிசனை செலுத்தப்பட்டது. கொழும்பு அரசு பச்சைக்கொடி காட்டிய சில முதலீட்டுத் திட்டங்களைக் கூட, வடக்கு மாகாணசபை தனது அதிகாரத்துக்கு உட்பட்டு அதனது ஆட்சிக் காலத்தில் தடுத்திருந்தது. குடாநாடே சுத்தமான குடிதண்ணீருக்காக அலைந்து கொண்டிருக்கையில், இங்கிருந்து போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீரை ஏற்றுமதி செய்யும் முதலீட்டுத் திட்டத்தை வடக்கு மாகாணசபை அனுமதிக்க மறுத்திருந்தது. இவ்வாறான சில பல திட்டங்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

ஆனால் இப்போது வடக்கு மாகாணசபை செயலிழந்துள்ள நிலையில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத சூழலில், கொழும்பு அரசின் பிரதிநிதியாகச் செயற்படும் ஆளுநரால் இயக்கப்படுகின்றது. இவ்வாறானதொரு நிலையில்தான் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்திய முதலீட்டுக்கான கதவு அகலத் திறந்து விடப்பட்டிருக்கின்றது. இது ஆபத்தானது. சிங்கள தேசத்து ஆட்சியாளர்கள், தமிழர் தேசத்தை இந்தியாவிடம் அடகு வைத்து தமக்கான கடனைப் பெற்றிருக்கின்றார்கள்.

இந்திய முதலீட்டாளர்களின் திட்டங்கள் என்ன? அவற்றின் சுற்றுச்சூழல் பாதிப்புத் தொடர்பில் மதிப்பாய்வு செய்யப்பட்டதா? வடக்கு, கிழக்கு மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்கள் பெறப்பட்டனவா? இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் இன்னும் வெளிச்சத்துக்கு வராதவை.

தமிழர் தேசத்து நலனுக்கு விரோதமான இந்திய முதலீடுகள் வரும்போது நிச்சயமாக தாயக மக்கள் எதிர்க்கவே செய்வார்கள். இது, தமிழர் தாயகத்துக்கும் இந்திய தேசத்துக்கும் இடையிலான முரண்நிலைக்கே வழிவகுக்கும்.
1987 ஆம் ஆண்டு இந்திய- இலங்கை ஒப்பந்தம் என்ற ஒன்றின் ஊடாக இந்தியப் படைகள் தாயக மண்ணில் கால் பதித்து கடைசியில், தமிழர்களின் விரோதியாக இந்தியாவை எப்படி சிங்கள தேசம் மாற்றியதோ, அதே போன்றதொரு வரலாற்றை மீண்டும் எழுத முற்படுகின்றதா என்ற சந்தேகம் வலுவாக எழுகின்றது.

விரும்பினாலோ, விரும்பாவிட்டாலோ, தவிர்க்க முடியாத அல்லது தவிர்க்கப்பட இயலாத சக்தியாக இலங்கைத் தமிழர்களின் அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியா நந்தி போன்று அமர்ந்திருக்கின்றது. எனவே, இந்தியாவுக்கு எதிராக தாயக மக்களை திசை திருப்பும் தேவை சிங்கள தேசத்துக்கு என்றும் இருக்கின்றது. இந்த விடயத்தை தமிழர் தரப்பும், இந்தியாவும் புரிந்து கொண்டு முன்னோக்கிச் செல்வதே புத்திசாலித்தனம்.

### நாளொரு நல்வார்த்தை

"பேச்சில் இனிமை, கொள்கையில் தெளிவு, செயலில் உறுதி ஆகிய மூன்றும் உள்ளவரால் எதையும் சாதிக்க முடியும். - புல்லர்




# இந்திய உடன்படிக்கையை பகிரங்கப்படுத்த வேண்டும்

## ஜே.வி.பி. வலியுறுத்து



**கொழும்பு,மார்ச் 19**
**இந்தியாவிடமிருந்து 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கைகளை அரசு பகிரங்கப்படுத்தவேண்டும் என்று ஜே.வி.பி வலியுறுத்தியுள்ளது.**

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியைக் காரணம் காட்டி, இலங்கையில் எரிபொருள் விநியோகப் பொறிமுறையை, இந்தியாவிடம் ஒப்படைக்க தற்போதைய நிர்வாகம் முயற்சித்து வருகின்றது என்று ஜே.வி.பியின் அரசியல் சபை உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.
(ஒ-4,இ)

## இந்தியாவை அடுத்து

# வர்த்தக உடன்படிக்கையை துரிதப்படுத்துகின்றது சீனா

கொழும்பு,மார்ச் 19
இலங்கை, இந்தியாவுடன் கடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள நிலையில், வர்த்தக உடன்படிக்கையை சீனா துரிதப்படுத்தியுள்ளது.
வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுக் கூட்டத்தில் இந்த உடன்படிக்கையைத் துரிதப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சீனாவிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.
சீனா கடந்த வருடத்தில் 4 ஆயிரத்து 700 மில்லியன் டொலர் பெறுமதியான பொருள்களை இலங்கைக்கு அனுப்பியது. எனினும் இலங்கையிலிருந்து சீனாவுக்கு 274 மில்லியன் டொலர் பெறுமதியான பொருள்களே அனுப்பப்பட்டன. இந்தத் தரவுகளுக்கு அமைய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை அபாயத்தில் இருப்பது கணிக்கப்பட்டுள்ளது.
ஏற்கனவே அதிகளவிலான பொருள்களை சீனாவிலிருந்து கொண்டுவரும் இலங்கை, சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்வதன் ஊடாக சீனாவின் சந்தையுடன் போட்டியிட முடியுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.
இதற்காக இன்னமும் முறையான சட்ட வரைவு தயாரிக்கப்படாத நிலையில், அவசர அவசரமாக இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டால் உள்நாட்டுக் கைத்தொழில்கள் பாதிக்கக் கூடும்.
இந்திய உடன்படிக்கைகள் மூலம் எரிசக்தித்துறை ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், சீனாவிடமிருந்து பெறப்பட்ட கடனுக்காக, சுதந்திர வர்த்தக உடன்படிக்கை அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளதா என்றும் பொருளாதார வல்லுநர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ஒ-4-இ)

நாளை 20.03.2022 ஞாயிற்றுக்கிழமை பங்குனி 6
சுபநேரம் : 09.18 - 10.48
ராகுகாலம்: 04.48 - 06.18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களால்

# புதுவருட காலத்தின்பின் தொற்று அதிகரிக்கலாம்



**கொழும்பு, மார்ச் 19**

**சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றாது எதிர்ப்புப் போராட்டங்கள் மற்றும் ஒன்றுகூடல்களை மேற்கொள்வதால் சித்திரைப் புத்தாண்டுக் காலத்தின் பின்னர் கொரோனாத் தொற்றுநிலை மோசமடையலாம் என சுகாதார மருத்துவ அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

இதுதொடர்பில் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவிக்கையில்;

நாட்டில் தற்போது தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுவதால் மக்கள் அச்சமின்றி உள்ளனர். ஆயினும் தொற்றும் அச்சுறுத்தல் அகன்றுவிட்டது எனக் கருதக்கூடாது. மக்கள் நம்பிக்கையோடு புதுவருடக் கொண்டாட்டங்களுக்காகக் காத்திருக்கிறனர்.

இந்த நிலையில் சுகாதார வழிகாட்டல்களைப் புறக்கணித்து போராட்டங்களிலும் ஒன்றுகூடல்களிலும் பங்கேற்றால் புதுவருட காலத்தின் பின் தொற்றுநிலை பயங்கர நிலையை அடையக் கூடும் - என்றார்.

(ச-ரி1)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்



கிளிநொச்சி, மார்ச் 19

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச்சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும் நேற்றுமுன்தினம் சங்கத்தின் பணிமனையில் நடைபெற்றது.

இதன்போது சங்கத்தின் புதிய தலைவராக வே.தபேந்திரன், செயலாளராக மா.சிவபாலன், பொருளாளராக மஞ்சுளா, உப தலைவர்களாக மருத்துவர் மா.யெயராசா, சி.சத்தியசீலன், உப செயலாளராக ரஞ்சிதமலர் அருணாசலம் ஆகியோருடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக 15 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் சங்கத்தின் பெருந்தலைவராக நிறுவுநர் வே. இறைபிள்ளை தொடர்ந்தும் தெரிவு செய்யப்பட்டார்.

(ஒ-14,13)

★ ★ ★



யாழ்ப்பாணம், மார்ச் 19

வடமாகாண வருமானப் பரிசோதகர் தொழிற்சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணிக்கு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது தலைவராக ச.போல்தர்சாந், செயலாளராக பி.குருபரன், பொருளாளராக தே.ரெனோ, உப தலைவராக ம.யோ.இருதயராஜ், உபசெயலாளராக கா.ஜெயராஜசிங்கம், ஆலோசகராக செ.சந்திரகுமார், இணைப்பாளர்களாக ரி.சி.றொசான், வ.லோகறதன், சி.பிறேம்குமார், சி.கௌரீசன், வே.சண்முகசுந்தரம், வே.றொபேட் நிக்சன், ஜெகஜீவன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(ஒ-14,125)



## தோத்திரத் திரட்டு நூல் வெளியீடு

கொழும்பு, மார்ச் 19

அகில இலங்கை சைவ மகா சபையால் தெய்வத்தமிழ் தோத்திரத்திரட்டு வெளியீட்டு விழா நுவரெலியா காயத்திரி பீடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது பண்டாரவளை மற்றும் ஹப்புத்தலை அறநெறிப் பாடசாலைகளுக்கு தோத்திரத்திரட்டுப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

நிகழ்வில் அகில இலங்கை சைவ மகாசபையினர், தமிழ்ச்சைவப் பேரவையினர், நுவரெலியா காயத்திரி பீட அறங்காவலர் சக்திவேல் சந்திரமோகன், மலையக நவநாதசித்தர், சிவதொண்டர்கள், சிவமங்கையர், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(ஒ-14,125)

## மகளிருக்கான விழிப்புணர்வு

சாவகச்சேரி, மார்ச் 19

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், மகளிருக்கான போதை தொடர்பான விழிப்புணர்வு அண்மையில் நாவற்குழி மேற்கு பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

வேள்ட்விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஒழுங்குபடுத்தப்பட்ட நிகழ்வில் தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் தமிழினி சதீஸ், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுசபை வடமாகாண இணைப்பாளர் சியாமினி, மதுபானம் மற்றும் போதைப் பொருள் தடுப்பு நிலைய வடமாகாண இணைப்பாளர் கோடீஸ்வரன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

(ஒ-14,9)





## சிறுவர் சந்தை

யாழ்ப்பாணம், மார்ச் 19

சுழிபுரம் மேற்கு கலைமகள் முன்பள்ளி சிறுவர் பாடசாலையின் 2022 ஆம் ஆண்டுக்கான சிறுவர் சந்தை நேற்றுக் காலை 8.30 மணிக்கு சுழிபுரம் மேற்கு ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் ஆலய தேவஸ்தான வளாகத்தில் இடம்பெற்றது.

கலைமகள் முன்பள்ளி முகாமைத்துவக் குழு, கலைமகள் முன்பள்ளி ஆசிரியர்களின் வழிநடத்தலில் பெற்றோர்களின் ஒத்துழைப்பில் குறித்த சிறுவர் சந்தை இடம்பெற்றது.

(ஒ-14,125)

# சீனாவில் மீண்டும் கொரோனா இலங்கையையும் பாதிக்கும்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை



கொழும்பு, மார்ச் 19

கொரோனாத் தொற்று சீனாவில் மீண்டும் அதிகரித்து வருவதால் இலங்கையையும் பாதிக்கும் என்று சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் தினமும் 400 புதிய தொற்றாளர்கள் இனங்காணப்படுவதாகவும் 10 கொரோனா இறப்புகள் இடம்பெறுவதாகவும் சுகாதார அமைச்சின் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் உலகிலிருந்து பிரிந்து தனிவேறாக வாழும் ஒரு தேசமல்ல. சீன தேசம் கொரோனாத் தொற்றின் திரிபு மாதிரி காரணமாக பல நகரங்களில் முடக்க நிலையைப் பிரகடனம் செய்துள்ளது. இதனால் இலங்கையிலும் எந்த நேரத்திலும் பாதிப்பு ஏற்படலாம்.

எனவே தொற்றிலிருந்து நம்மைப் பாதுகாக்க முகக்கவசம் அணிவதும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதும் அவசியமாகவுள்ளது - என்றார்.

(ஒ-14,ரி1)

# சனசமூக நிலையத்தை இயக்குமாறு கோரிக்கை

சாவகச்சேரி, மார்ச் 19

மந்துவில் வடக்கில் உள்ள சனசமூக நிலையத்தை மீள இயக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சனசமூக நிலையம் இயங்கிய காலத்தில் 100க்கும் மேற்பட்ட வாசகர்கள் பத்திரிகை வாசிப்புக்காக அதைப் பயன்படுத்தி வந்தனர். ஆனால் கடந்த 2018 ஜூன் மாதம் நடைபெற்ற நிர்வாகத் தெரிவுக் கூட்டத்தின் பின் சுமார் நான்கு வருடங்களாக குறித்த சனசமூக நிலையம் மூடப்பட்டுள்ளது. இதனால் வாசகர்கள் பல மைல்களுக்கு அப்பாலுள்ள வேறொரு சனசமூக நிலையத்துக்குச் செல்லவேண்டியுள்ளது. எனவே சனசமூக நிலையத்தை மீள இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எதையும் தைரியத்துடன் எதிர்கொண்டு ஏற்றம் பெறுவீர்கள். மற்றவர்களுக்கு உங்கள் மேல்இருந்த நல்ல அபிப்பிராயம் கூடும். கடந்த சில நாள்களில் தொடங்கிய முயற்சி நிறைவேறும்.

**இடபம்:** கோயிலுக்குச் சென்று வருவீர்கள்,மன அமைதி கிடைக்கும். நீண்ட காலத்தேவை ஒன்று நிறைவடையும். கடன் குறையும். முன்னேற்றம் பற்றிய நல்ல தகவல் கிடைக்கும்.

**மிதுனம் :** நல்ல நோக்கத்துடன் எடுக்கும் முடிவு மற்றவரால் பாராட்டப் பெறும். மற்றவரிடம் கைமாற்றாக வாங்கிய பணத்தைத்திருப்பிக்கொடுப்பீர்கள்.

**கடகம்:** உறவினரிடம் இருந்து வியக்கும்படியான செய்தி வரும். எதையும் நிதானித்துச் செய்வதால், நன்மை அடைவீர்கள். வெளிநாட்டு வேலை முயற்சியில் நல்ல பலன் கிடைக்கும்.

**சிம்மம்:** எடுத்த வேலை இனிதே முடிவடையும். பணம் கணிசமாகக் கிடைக்கும் உழைப்பைக் கூட்டி மகிழ்ச்சியை அதிகரித்துக் கொள்வீர்கள். உங்களுடைய குடும்பத்தில் கலகலப்பு நிலவும்.

**கன்னி:** பிள்ளைகளிடமிருந்து பிரச்சினை வரும். சமாளிப்பீர்கள். எவருடனும் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. நண்பர்களால் நன்மையும், லாபமும் உண்டு. மகிழ்ச்சி கூடும்.

**துலாம்:** குடும்ப நண்பர்களுக்கு உங்களால் நன்மை உண்டாகும். இன்று வேலையில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. இத்தனைநாள் இருந்து வந்த மனப்பயம் நீங்கும். புதிய கோணத்தில் சிந்தித்து வெற்றியடைவீர்கள்.

**விருச்சிகம்:** சகிப்புத்தன்மை தேவைப்படும் நாள். அமைதி நிலவும். வீண்விடயங்களை அதிகமாக கவனத்தில் கொள்ளவேண்டாம். அனுபவசாலிகளின் ஒத்துழைப்பால் தன்னம்பிக்கை கூடும்.

**தனுசு:** செயற்திறன்அதிகரிக்கும். பிரச்சினைகளிலிருந்து ஒதுங்கியிருப்பீர்கள். பொது சேவைகளை முன்னின்று நடத்திப் புகழ் பெறுவீர்கள். பிறருடன்பேசும்போது வார்த்தைகளில் கவனம் தேவை.

**மகரம்:** பயம் நீங்கி எதையும் சமாளிக்கும் திறன் வளரும் நாள். தொழிலில் முன்னேற்றங்கள் சற்று மந்தமாக இருக்கும். குடும்பத்தில் அவசியமற்ற செலவுகளை குறைப்பது நல்லது.

**கும்பம்:** முயற்சியில் சிறு தடை உண்டாகக் கூடும்.பொறுமை அவசியம். உங்களது பேச்சு,செயலால் தீங்கு விளையாமல் கவனமாயிருங்கள். கூடுதலான பணவரவு உண்டு. சேமிப்புக் கூடும்.

**மீனம்:** குடும்பத்தாருடன் சுற்றுலா செல்ல திட்டமிடுவீர்கள் நன்மை கிடைப்பதற்கு அதிகம் பாடுபட வேண்டியிருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். ஆரோக்கியம் மேம்படும்.

### உக்ரைன் போரை நிறுத்துமாறு

# சர்வதேச நீதிமன்று பிறப்பித்த உத்தரவை நிராகரித்தது ரஷ்யா

**மொஸ்கோ, மார்ச் 19**

**உக்ரைன் போரை நிறுத்துமாறு சர்வதேச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை ரஷ்யா நிராகரித்துள்ளது.**



நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது.

இந்தப் போரில் ஏராளமானோர் உயிரிழந்துள்ளதுடன் 30 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஏதிலிகளாக அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

போரை நிறுத்தும்படி பல்வேறு நாடுகள் ரஷ்யாவுக்கு வேண்டுகோள் விடுக்கின்றனர். எனினும் ரஷ்யா மக்கள் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் மேற்கொள்கிறது எனவும் இனப்படுகொலையில் ஈடுபடுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் உக்ரைன் மீதான போரை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ரஷ்யாவுக்கு சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில் உக்ரைன் மீதான போரை நிறுத்த முடியாது என ரஷ்ய ஜனாதிபதி மாளிகை தெரிவித்துள்ளது. (ச-இ)

### 360 லட்சம் ஆண்டுகளுக்கு முந்தைய

# திமிங்கிலத்தின் மண்டையோடு பாலைவனத்தில் கண்டுபிடிப்பு

பெரு, மார்ச் 19

36 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய திமிங்கிலத்தின் தலைப் பகுதி பாலைவனத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பெரு நாட்டின் ஒஷிகஜி பாலைவனத்தில் புதைப்படிம ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்டு வரும் ஆராய்ச்சிப் பணியின்போதே இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலைவனம் பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு பெருங்கடலாக இருந்ததற்கான சான்றுகள் உள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மண்டை ஓடு பலிலோசாரஸ் என்ற திமிங்கிலத்துக்குச் சொந்தமானது எனவும் இந்த மண்டை ஓடு சுமார் 360 லட்சம் ஆண்டுகளுக்கு முந்தையது எனவும் ஆராய்ச்சியாளர்களால் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# 30 ஆண்டுகள் காத்திருந்து ஆசிரியரை கொன்ற மாணவன்

பிரசெல்ஸ், மார்ச் 19

ஆசிரியர் தன்னை அவமானப்படுத்தினார் என 30 ஆண்டுகளுக்குப் பின் அவரை 101 முறை கத்தியால் குத்தி மாணவர் ஒருவர் கொலை செய்துள்ளார்.

1990ஆம் ஆண்டு 7 வயதான மாணவனை குறித்த ஆசிரியர் அடித்து அவமானப்படுத்தியுள்ளார். இதனால் கோபமடைந்த குறித்த மாணவன் 30 வருடங்களுக்குப் பின் அந்த ஆசிரியரைக் கண்டறிந்து கடந்த ஆண்டு 101 முறை கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளார். கொலைசெய்து சுமார் 16 மாதங்களின் பின் தற்போது அந்த மாணவனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த மாணவனை விசாரணைக்கு உட்படுத்தியபோது, "சிறுவயதில் தன்னை அவமானப்படுத்திய ஆசிரியரை பழிவாங்குவதற்காக கொலை செய்தேன்" எனத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# ஆசிய பணக்காரர் பட்டியலில் முகேஷ் அம்பானி முதலிடம்

புதுடில்லி, மார்ச் 19

இந்தியாவின் ரிலையன்ஸ் நிறுவனத்தின் தலைவர் முகேஷ் அம்பானி ஆசியாவின் பணக்காரர் பட்டியலில் முதல் இடத்துக்கு முன்னேறியுள்ளார் என ஹூருன் என்ற ஆய்வு நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

இவரின் சொத்துமதிப்பு கடந்த ஆண்டைவிட 24 சதவீதம் உயர்ந்து 103 பில்லியன் டொலராக உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதானி குழுமத் தலைவர் கௌதம் அதானி 81 பில்லியன் டொலர் சொத்துமதிப்புடன் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார். (ச-இ)

# சொத்தில் அல்ல: மீட்பில் பேராசை கொள்வோம்

**தவக்காலச் சிந்தனை**

திராட்சைத் தோட்ட உரிமையாளர் ஒருவர் அதனை ஒருவரிடம் குத்தகைக்கு கொடுத்துவிட்டு நெடும்பயணம் சென்றார். பின் ஒருநாள் விளைச்சலின் பங்கைப் பெற்றுவர பணியாளர்களை அனுப்பினார்.

அவர்களைக் கொலைசெய்தும் கல்லால் எறிந்தும் விரட்டிவிட்டான் அந்தக் கொடிய குத்தகைக்காரன். இறுதியாக தன் மகனை அனுப்ப இவன்தான் சொத்துக்கு உரியவன் இவனைக் கொன்று விடுவோம். சொத்தை எமதாக்கிக் கொள்வோம் என்று அப்படியே [illegible] கொலை [illegible] நற்பணியாளர்களிடம் ஒப்படைத்தார்.

கடவுள் எமக்கு உறவுகள் சொத்துக்களை தந்திருப்பது அன்பு செய்யவும் பாதுகாத்து பயன்களைப் பகிர்ந்து கொள்ளவுமே.

இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றாது மேலும் அபகரிக்கின்றபோது உறவு பிளவுபட்டு இரத்தம் சிந்தும் நிலை தோன்றுகிறது. இதனையே கொடிய குத்தகைக்காரன் கதை கூறி நிற்கிறது. மனிதனை அடுத்தவனின் சொத்துக்கள் மட்டில் உள்ள பேராசையும், பொறாமையுமே இந்த இழிவான நிலைக்கு இட்டுச் செல்கிறது.

[illegible] எதிர்பார்ப்பது உனது க[illegible] [illegible] சரிவரச் செய்து உனது தலைவனின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றுக்கொள் [illegible]த்தைப் பாதுகாத்துக்கொள். அ[illegible] செய் பிறரது உய[illegible]வில் மகிழ்வு [illegible] என்பதாகும். எனக்குத் தர[illegible] [illegible]க்கை என்னு[illegible] தோட்டத்தில் [illegible]களைச் சரியா[illegible] புரிகின்றேனா? [illegible]யாளரான இறை[illegible]வன் என்னி[illegible]க்குக் கேட்டா[illegible] இதோ ஆண்[illegible] [illegible]ர் ஒப்படைத்[illegible] தோட்டத்தின் [illegible] என்று தைரி[illegible]மாகக் கூறத் [illegible]?

[illegible]ஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்யமேவ ஜயதே

இந்திய துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்

## இந்திய துணைத் தூதரகமும் வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களமும் இணைந்து நடாத்தும்

## இலவச சித்த மருத்துவ முகாம்

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெறும்.

காலம் : 20.03.2022 (ஞாயிற்றுக்கிழமை)
இடம் : முருங்கன் டொன் பொஸ்கோ ரெக்
நேரம் : காலை 9.00 மணி முதல் – மாலை 4.00 மணிவரை

நிபுணத்துவம் பெற்ற சித்த மருத்துவர்கள் மூலம் இலவச மருத்துவ ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகள் இலவச மருத்துவ பரிசோதனைகளுடன் (சலரோக, குருதி பரிசோதனைகள்) சித்த மருந்துகள் இலவசமாக வழங்கப்படும்.

**அனைவரும் வருக! பயன்பெறுக!**

(CR 8096) (4/6)



"Siddha For All"

Azadi Ka Amrit Mahotsav

## தடுப்பூசி ஏற்றும் பணி கைதடியில் ஆரம்பம்

சாவகச்சேரி, மார்ச் 19

கைதடிப் பிரதேசத்தில் கொரோனாத் தடுப்பூசியை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணிகளை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் ஆரம்பித்துள்ளனர். இதன்படி, கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்தில் தடுப்பூசி ஏற்றும் பணி நேற்று இடம்பெற்றது.

மேலும், நாளைமறுதினம் திங்கட்கிழமை கைதடி தெற்கு மின்னொளி சனசமூக நிலைய மண்டபத்திலும் 23ஆம் திகதி புதன்கிழமை தென்மட்டுவில் பொதுநோக்கு மண்டபத்திலும், 24 ஆம் திகதி கைதடி நுணாவில் குமரகுருபரன் சனசமூக நிலைய மண்டபத்திலும், 25 ஆம் திகதி கைதடி வடக்கு உதயசூரியன் சனசமூகநிலைய மண்டபத்திலும் தடுப்பூசி ஏற்றும் பணிகள் காலை 8.00 மணி தொடக்கம் நன்பகல் 12.00 மணி வரை இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(வ-9)

## மரண அறிவித்தல்

### திரு. சுந்தரம் நித்தியானந்தம்



ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், ஞானியார் வளவு உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சுந்தரம் நித்தியானந்தம் அவர்கள் நேற்று (18.03.2022) வெள்ளிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம் செல்லம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சிவபெருமான் இராசலட்சுமி தம்பதிகளின் மருமகனும், ஜானகி (வைத்தியர்) அவர்களின் அன்புக்கணவரும், ஜெய்கரன், சயனுதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரியா, கிருஸ்ணபவன் ஆகியோரின் அன்புமிகு மாமனாரும், அகானா, அகர்சன் ஆகியோரின் பாசமிகு பேரனும், மகானந்தம் (கனடா), சறோஜினிதேவி, சுலோசனா, சகுந்தலாதேவி, சாந்தினிதேவி ஆகியோரின் அருமைச்சகோதரனும், காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் ஜெயக்குமார் (அவுஸ்ரேலியா), றூபினி (அவுஸ்ரேலியா), மோகனகுமார் (அவுஸ்ரேலியா), கௌரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றைய தினம் (18.03.2022) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூவோடை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CR 8119) (4/6)

ஞானியார்வளவு, உடுவில் கிழக்கு
சுன்னாகம்.

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 02 . 09 . 1973

ஆண்டவன் அடியில் 17 . 03 . 2022



### ஸ்ரீதரன் செல்வராணி

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரீதரன் செல்வராணி கடந்த (17.03.2022) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்லத்துரை இராசம்மா தம்பதியரின் ஏகபுத்திரியும், ஸ்ரீதரனின் (ஆளுநர் அலுவலகம்- வட மாகாணம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சண்முகம் மற்றும் இராசமணி தம்பதியரின் மருமகளும், ஷாருசா (யா/சா.இ.க. மாணவி-2020), அமரர் வர்ஜின், நிஷா, அபிஷேகன் (யா/சா.இ.க மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவானந்தன் (ஜேர்மனி), காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தனபதி (ஜேர்மனி), குமுதினி (சுவிஸ்), கிரிதரன் (வலயக் கல்வி அலுவலகம் - தென்மராட்சி), பகீரதன் (பத்திரிகை விநியோகஸ்தர்), குபேந்தினி (இலங்கை), குஜேந்தினி (சுவிஸ்), குசேந்தினி (கனடா), புவிதரன் (கனடா), பாமினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், கவினயா, சகின் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 04 . 1931

மறைவு 16 . 03 . 2022



### சற்குணம் இம்மானுவல்

யாழ். சாவகச்சேரி மீசாலையைப் பிறப்பிட மாகவும், கனடா Toronto வை வதிவிட மாகவும் கொண்ட சற்குணம் இம்மானுவல் அவர்கள் 16-03-2022 புதன்கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - சின்னபிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற யோசப் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற யோசப் இம்மானுவல் அவர்களின் பாசமிகு மனைவியும், சாந்தினி, காலஞ் சென்ற தயாளினி, குணராஜா (Guna, Embassy restaurant- Samosa King owner), வசந்தினி, ஜெயந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், விக்ரர், கிருஷாந்தி, ராஜன், சிறி (AIRLINK TRAVEL) ஆகி யோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, சிவகுரு, புஸ்பமலர், நவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான குமுதினி, பாலசுந்தரம், புஸ்பநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், டிலுஷா, சுஜீத், ஐரின், ரேபேக்கா, நொய்லின், ஸ்ரெபினி, ரெஜி, சொப்னா, அர்ச்சனா ஆகியோரின் ஆருயிர் பேத்தியும், ஒலிவர், இலேயனா, ஷாலர் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளைமறுதினம் (21.03.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு திருப்பலி பூசை நடைபெற்று, முற்பகல் 11.30 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கண்டி வீதி, சாவகச்சேரி.

(cs 43599) (2.6)

தகவல்:
திருமதி பு.நவமலர்
(ராணி - சகோதரி)
077 849 5284

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UK இல் கல்வி வாய்ப்பு

- 13 வயது தொடக்கம் 22 வயது வரையுள்ள அனைத்து மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- 13 வயது தொடக்கம் 17 வரையுள்ள மாணவர்களுக்க உடன் விசா வழங்கப்படும்.

Grade 08 London → 4Years → O/L London → 2Years → A/L London → University UK
- Medicine
- Engineering
- IT & Others

தொடர்புகளுக்கு :

Tel : +94 74 229 3324 | Whatsapp : +44 7958 408 280

Email : principal@croydonmet.org.uk, joseph.vilvaraj@gmail.com

(CS 18897) (2.6)

## Dr.Arunasalam Sivapathasundaram Memorial Lecture 2022

By

Professor Sachith Mettananda,
MBBS(Col) MD-Paed(Col),
DPhil(Oxon) FRCPCH(UK) FRCP(Edin)
Professor of Paediatrics,
University of Kelaniya.

On

"Curing incurable:
Development of genetic-based therapies for thalassaemia"

*On*

Monday 21st March 2022 at 3.00 p.m
at the Hoover Auditorium,
Faculty of Medicine,
University of Jaffna

All are cordially invited.
Kindly follow the precautionary measures for COVID 19 when participating.

Registrar,
University of Jaffna.
Sri Lanka
19.3.2022

(in 17037(2.6)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24 - 11 - 1943

மறைவு 30 - 03 - 2021

அமரர்

### திரு. கனகசபை குட்டித்தம்பி பேரம்பலம்

திதி : 19.03.2022

அன்பான குடும்பத் தலைவராய்
பண்பான நல்ல வழிகாட்டியாய்
இறை ஆசியுடன் அறிவும் தந்து
எம்மை அரவணைத்து வாழ்ந்த வாழ்க்கை
என்றும் எமக்கு ஒரு பாடம்
நிஜமான நீங்கள் இன்று நிழலாய் போயினும்
எம் இதயங்களின் உணர்வாகி
இரண்டறக் கலந்து ... தெய்வமே!
உங்களை இருகரம் கூப்பி மீள நினைந்து
- நித்தமும் கைதொழும்

குடும்பத்தினர்.

(cr.37517) (2.6)

## உயிருடன் இருப்பவருக்கு இறப்புச் சான்றிதழ்

கொழும்பு, மார்ச் 19

உயிருடன் இருக்கும் போது, இறப்புச் சான்றிதழைப் பெற்ற நபர் ஒருவர் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தச் சம்பவம் எம்பிலிபிட்டிய செவனகல நெலும்வெவப் பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

டபிள்யூ.இ. சரத் (வயது 48) என்ற நபருக்கே, கார் விபத்தில் மூளையில் குருதிக்கசிவு ஏற்பட்டு இறப்பு ஏற்பட்டுள்ளது என்று இறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

(ஒ-4-இ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/சுழிபுரம் ஐக்கியசங்க சைவ வித்தியாசாலையில் 2021ம் ஆண்டுக்கான 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் **148** புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து பாடசாலைக்கும் ஆசிரியர்களுக்கும் எமது கிராமத்துக்கும் எமக்கும் பெருமை சேர்த்த **செல்வி இராசலிங்கம் டிஷானி** அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாராட்டி வாழ்துபவர்
நாகராஜா தவமணி குடும்பத்தினர்
பெரியபுலோ, சுழிபுரம்.

(CR 80... 4/6)

## தேவை

### செஞ்சோலை சிறுவர் இல்லத்திற்கு

- பெண் பராமரிப்பாளர்
- உளவளத்துணையாளர்

உடன் தொடர்புகொள்ளவும்
தகுந்த சம்பளம் வழங்கப்படும்
(நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

(CS akn 11611) (2.6)

### 071 535 4500

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திரு.இ. இராமேஸ் அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர் **இராசையா இராமலிங்கம்**



அவர்கள் 16.03.2022 அன்று இறைபதமடைந்த செய்தியறிந்து மிகுந்த துயரடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தவர்க்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை

(in 17036) (2.6)

## கண்ணீர் அஞ்சலி

யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறையில் தற்காலிக உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றும் **செல்வி சரண்யா தர்மரத்தினம்** அவர்களின் பாசமிகு தாயார் **கமலவதி தர்மரத்தினம்** அவர்கள் 17.03.2022ஆம் திகதி வியாழக்கிழமை இறைபதமடைந்த செய்தி அறிந்து நாம் மிகுந்த வேதனையடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(CS 18928B) (4/6)

புவியியற்றுறை சமூகம், யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறையில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திருமதி ஜனனி தயானந்தன்** அவர்களின் பாசமிகு தந்தையார் **சுப்ரமணியம் மனோகரன்** அவர்கள் 17.03.2022ஆம் திகதி வியாழக்கிழமை இறைபதமடைந்த செய்தி அறிந்து நாம் மிகுந்க வேதனையடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(CS 18928B) (4/6)

புவியியற்றுறை சமூகம், யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

## பயணிகளுடன் தீப்பற்றிய பஸ்

கொழும்பு, மார்ச் 19

பயணிகளை ஏற்றிச் சென்ற அரச பஸ்ஸொன்று தீப்பிடித்துள்ளது.

இந்தச் சம்பவம் தம்புள்ளை - அநுராதபுரம் வீதியின் புலகல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸே தீப்பிடித்துள்ளது.

அதிர்ஷ்டவசமாக எவருக்கும் உயிர் ஆபத்து ஏற்படவில்லை. பஸ்ஸில் சிக்கிய பயணிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். சம்பவம் தொடர்பில் தம்புள்ளை பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(ஒ-4-இ)

## திருமணத்தன்றே மணமகன் கொலை

### முன்னாள் கணவர் கைது

கொழும்பு, மார்ச் 19

திருமணம் நடைபெற்ற அன்றே, மணமகன் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கொம்பனித்தெரு டோஸன் வீதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மணமகளின் முன்னாள் கணவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மணமகன் கடந்த 16 ஆம் திகதி தனது திருமணத்தைப் பதிவு செய்வதற்காக இரவு தனது வீட்டில் திருமண நிகழ்வு ஏற்பாடு செய்திருந்தார்.

அன்றைய தினம் மணமகளின் முன்னாள் கணவர் அங்கு வந்து மோதலில் ஈடுபட்டுள்ளார். மோதல் தீவிரம் அடைந்ததால், மணமகனின் கழுத்தை கத்தியால் வெட்டியுள்ளார். சம்பவத்தில் படுகாயமடைந்த மணமகன் கொழும்பு தேசிய மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபர் தப்பிச் சென்ற நிலையில், அவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். சம்பவத்தில் முச்சக்கர வண்டிச் சாரதி (வயது 51) ஒருவரே கொலை செய்யப்பட்டுள்ளார். மணமகள்(வயது 48) மொரட்டுவை சொய்ஸாபுர பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

(ஒ-4-இ)

## சங்காபிஷேக விஞ்ஞாபனம்

...ரும்பிராய் மடத்தடி ஞானவைரவர் ஆலய சங்காபிஷேக விஞ்ஞாபனம் நாளை காலை 8.30 மணிக்கு ஆலயப்பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ இ.கலாராசக் குருக்கள் தலைமையில் 108 சங்குகளின் அபிஷேக பூசையுடன் நடைபெறவுள்ளது. ஆலய வருடாந்த அபிஷேகம் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் என்று ஆலயப் பரிபால சபையினர் அறிவித்துள்ளனர்.

(ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
## சபைநிதி வேலைத்திட்டம் 2022 – கட்டம் I

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காகக் கோரப்படுகின்றது.

02. தேசியபோட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட03/2020(i)ஆம் இலக்க 11.01.2021ஆந் திகதிய, 04/2016(ii)ஆம் இலக்க 08.05.2019ஆந் திகதிய மற்றும் 04/2016(iii) ஆம் இலக்க 18.02.2021ஆந் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03. இல 1-19 வரையான கேள்விகளுக்கு கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி 0212240017) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 19.03.2022 தொடக்கம் 01.04.2022ஆம் திகதி வரை வேலைநாட்களில் மு.ப 9.00 மணிமுதல் 14.00 மணிவரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் தெற்குபிரதேசசபை சுன்னாகம் எனும் இடத்திலிருந்து 19.03.2022 திகதியிலிருந்து 01.04.2022ம் திகதிவரை காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000/- (வரிநீங்கலாக) இனை செலுத்திபெற்றுக் கொள்ளலாம். இத்தொகைபணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

07. பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு 04.04.2022ம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர் ,பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்குபிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலைவிபரம் ஒப்பந்தஇலக்கம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்துகேள்விசெல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப்பிணைசெல்லுபடியாகும் காலம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நாட்கள் | திகதி | தொகை | திகதி |
| 1 | காளி கோவில் 1ம் குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2022/01 | 0.702 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 8,000.00 | 20.06.2022 |
| 2 | சிறி சுப்பிரமணிய சனசமூக நிலைய முன் வீதி, கந்தரோடை NP/14/41/15/02(05)/CF/2022/02 | 0.715 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 8,000.00 | 20.06.2022 |
| 3 | பிரதேச செயலக குறுக்கு வீதிகள் NP/14/41/15/02(05)/CF/2022/03 | 0.687 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 7,000.00 | 20.06.2022 |
| 4 | கே.கே.எஸ். வீதி 3ம் ஒழுங்கை (சம்பத் முன் வீதி) மற்றும் முத்துகிருஸ்ணர் 3ம் குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2022/04 | 0.807 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 9,000.00 | 20.06.2022 |
| 5 | காளி கோவில் வீதி, சிற்பி ஒழுங்கை மற்றும் நாகம்மாள் 3ம் வீதி NP/14/41/15/02(05)/CF/2022/05 | 0.805 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 9,000.00 | 20.06.2022 |
| 6 | சூளானை வைரவர் வீதி NP/14/41/15/02(05)/CF/2022/06 | 0.573 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 6,000.00 | 20.06.2022 |
| 7 | அந்திரான் உப ஒழுங்கை NP/14/41/15/02(05)/CF/2022/07 | 1.032 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 11,000.00 | 20.06.2022 |
| 8 | ஐந்து வேம்படி வீதி, தாவடி மிகுதி வேலை, பத்தானை 6ம் உப வீதி மற்றும் மோகன் வீதி உப வீதி NP/14/41/15/02(05)/CF/2022/08 | 2.172 | 90 நாட்கள் | C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 06.06.2022 | 22,000.00 | 04.07.2022 |
| 9 | மட்டக்கச்சி 3ம்,4ம் குறுக்கு வீதிகள் NP/14/41/15/02(05)/CF/2022/09 | 0.806 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 9,000.00 | 20.06.2022 |
| 10 | மல்வம் 3ம் குறுக்கு 2,3,4,5,6,7 உபவீதிகள் NP/14/41/15/02(05)/CF/2022/10 | 1.399 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 14,000.00 | 20.06.2022 |
| 11 | ஞானவைரவர் வீதியின் கிளை வீதிகள் மற்றும் புகையிரத நிலைய வீதியின் கிளை வீதிகள் NP/14/41/15/02(05)/CF/2022/11 | 1.644 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 17,000.00 | 20.06.2022 |
| 12 | செட்டிவளவு கிளை வீதி மற்றும் இணுவில் மத்திய கல்லூரி மைதான அருகாமை வீதி NP/14/41/15/02(05)/CF/2022/12 | 0.990 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 10,000.00 | 20.06.2022 |
| 13 | தாவடி இ.த.க பாடசாலை மைதான முன் வீதி மற்றும் நெல்லுருவி பிள்ளையார் கிளை வீதி NP/14/41/15/02(05)/CF/2022/13 | 1.476 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 15,000.00 | 20.06.2022 |
| 14 | பலாலி வீதியின் குறுக்கு வீதி மற்றும் சுன்னாகம் புத்தூர் வீதியில் வைரவர் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2022/14 | 0.963 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 10,000.00 | 20.06.2022 |
| 15 | கருணாகரப்பிள்ளையார் வீதி மற்றும் கன்னிமார் கோவில் பின் வீதி NP/14/41/15/02(05)/CF/2022/15 | 2.796 | 90 நாட்கள் | C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 06.06.2022 | 28,000.00 | 04.07.2022 |
| 16 | உசத்தியோடை மயானத்தினை ஊடறுத்துச் செல்லும் வீதி NP/14/41/15/02(05)/CF/2022/16 | 2.433 | 90 நாட்கள் | C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 06.06.2022 | 25,000.00 | 04.07.2022 |
| 17 | முத்துமாரி அம்மன் 2ம், 3ம் 5ம் 6ம் குறுக்கு வீதிகள் NP/14/41/15/02(05)/CF/2022/17 | 1.275 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 13,000.00 | 20.06.2022 |
| 18 | சிவன் கோவில் வீதி (பின் வீதி) மற்றும் கோட்டைக்காடு சாலம்பன் குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2022/18 | 2.577 | 90 நாட்கள் | C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 06.06.2022 | 26,000.00 | 04.07.2022 |
| 19 | வீதி மின் விளக்குகள் கொள்வனவு NP/14/41(15)/03/05/Street light/2022/01 | 2.311 | 60 நாட்கள் | அங்கீகரிக் கப்பட்டநிறுவனம் | 49 நாட்கள் | 23.05.2022 | 13,000.00 | 20.06.2022 |

10. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்குபிரதேசசபை தலைமை அலுவலகத்தில் 25.03.2022ம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

க.தர்சுஷன்,
தவிசாளர், பெறுகைக்குழு,
வலிகாமம் தெற்குபிரதேசசபை, சுன்னாகம்.

(IN 17035) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேல்மாகாணத்தில் கடதாசித் தட்டுப்பாட்டால் பரீட்சைகள் பிற்போடல்!

கொழும்பு, மார்ச் 19

கடதாசிகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளின் இறுதித் தவணைப் பரீட்சைகள் தாமதப்படுத்தப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேல் மாகாண கல்விப் பணிப்பாளரினால் இதுகுறித்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது நிலவும் கடதாசித் தட்டுப்பாடு காரணமாக மாணவர்களுக்கான பாடப்புத்தகங்களை அச்சிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் பரீட்சைக்கான வினாத்தாள்களை அச்சிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக மேல்மாகாணத்தில் தற்போது பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேல்மாகாணத்தில் மட்டுமல்லாது நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் கல்வித்துறையில் இந்த நிலைமை மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

வலி. தென்மேற்கு பிரதேசசபையில்

## பயங்கரவாதச் சட்டத்தை நீக்குமாறு கோரி தீர்மானம்!

யாழ்ப்பாணம், மார்ச் 19

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபையில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வலிகாமம்.பிரதேசசபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் ஜெபநேசன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன் போது, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஜெசிதன் பிரேரணையைக் கொண்டுவந்தார். அது சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. (அ-ம27)

## ஜனாதிபதியை விமர்சித்த தொகுப்பாளினி இடைநீக்கம்



கொழும்பு, மார்ச் 19

சமூக ஊடகத்தில் ஜனாதிபதியை விமர்சித்துக் கருத்துக்களைப் பதிவிட்டார் என்ற குற்றச்சாட்டில், தொகுப்பாளினி ஒருவரை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் இடைநிறுத்தியுள்ளது.

பரமி நிலேப்னா ரணசிங்க என்பவரே இவ்வாறு சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை விமர்சித்து தனது தனிப்பட்ட முகநூலில் அவர் கருத்துக்களைப் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, தொலைக்காட்சி தொகுப்பாளினியின் இடைநிறுத்தம் தொடர்பில் ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும இதுவரை கருத்துத் தெரிவிக்கவில்லை.

தொகுப்பாளினியின் இடைநிறுத்தத்தை சுதந்திர ஊடக இயக்கம் கண்டித்துள்ளது. (ஒ-4-இ)

# யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

# இந்தியன் செலக்ஷனின்

## ஆடைத் தெரிவுகள்



திருமண பட்டுச் சாறிகள் கொட்டன் சாறிகள்
சல்வார்கள் சல்வார் துணிகள்,
புரொக்ஸ், வெஸ்ரேன் டொப்,
மொடர்ன் ரெஸ், சேட், ரீ சேட்,
ரவுஸர்கள்,
என ஏராளமான மனங்கவர்,
ஆடைத்தெரிவுகளோடு...

**இம்முறை சித்திரைப் புத்தாண்டை**
**இந்தின் செலக்ஷனுடன் கொண்டாட**
**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**
**காலம்: 19.03.2022 - 14.04.2022 வரை**

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்
(10)



सत्यमेव जयते
இந்திய துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்

# இந்தியாவின் 75 – வது சுதந்திர தின
# அசாதி கா அமிர்த் மஹோற்சவ் நிகழ்வினை

முன்னிட்டு
யாழ் இந்திய துணைத் தூதரகம் வடமாகாண கலை ஆர்வலர்களுக்கு ஏற்பாடு செய்துள்ள

# ஓவியப் போட்டி

## போட்டிக்கான தலைப்பு

## இந்திய கலை மற்றும் இந்திய கலாச்சாரம்

**போட்டி நிபந்தனைகள்**

- 16 வயதுக்கு மேற்பட்ட வடமாகாணத்தின் கலை ஆர்வலர்கள் யாவரும் பங்கு பெறமுடியும்
- ஒருவர் ஒரு ஓவியத்தை மட்டும் போட்டிக்கு சமர்பிக்க முடியும்
- ஓவியங்கள் யாவும் A3 அல்லது அதற்கு மேற்பட்ட அட்டையில் வரைதல் வேண்டும்
- ஊடகம் நீர் வர்ணம் அல்லது போஸ்டர் வர்ணம் அல்லது பெஸ்டல் வர்ணம் அல்லது கலப்பு ஊடகம்
- உங்களால் வழங்கப்படும் ஓவியங்கள் யாவும் திருப்பி வழங்கப்பட மாட்டாது
- வரையபெற்ற ஓவியங்கள் யாவும் உங்களுடைய விபரங்களுடன் 28 மார்ச் 2022 முற்பகல் 1.00 மணிக்கு முன்பாக அனுப்புதல் வேண்டும்

**பரிசுகள்**

| | |
|---|---|
| முதலாம் இடம் | 20000/= |
| இரண்டாம் இடம் | 15000/= |
| மூன்றாம் இடம் | 10000/= |

தெரிவாகும் சிறந்த ஓவியங்களுக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்

ஓவியங்கள் கிடைக்கப்பெற வேண்டிய முகவரி
இந்திய துணைத் தூதரகம்
இல.14 மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
தொலைபேசி இலக்கம் : 0212220504 / 0212220505


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 08 - 01 - 1951

மறைவு 11 - 03 - 2022

## செல்லத்துரை சுந்தரமூத்தி

அச்சுவேலி தோப்பைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சுந்தரமூத்தி அவர்கள் கடந்த (11.03.2022) வெள்ளிக் கிழமை அச்சுவேலியில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை கைராசிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சுப்பிரமணியம் தம்பதியினரின் அன்பு மருமகனும், கமலேஸ்வரி அவர்களின் அன்பு கணவரும், தனுஷா அவர்களின் அன்புத் தந்தையாரும், பாலசுப்பிரமணியம், சிவஞானம், அருள் (பாலு); வள்ளிநாயகி, காலஞ்சென்ற கணேசமூத்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சறோஜினிதேவி, எடித், விசாக்கா காலஞ்சென்றவர்களான தவமணிதேவி, நல்லையா ஆகியோரின் அன்பு மைத்துனரும், நில் அவர்களின் அன்பு மாமனாரும், இல்பூட், டெஸ்ரர் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (20.03.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 க்கு நடைபெற்று பூதவுடல் தோப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
074 211 4748, 077 616 0434

தகவல்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



மண்ணில் 12 - 09 - 1946

விண்ணில் 18 - 03 - 2022

## செல்வி சிசிலியா யோசப்

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி தூய திருமுழுக்கு யோவான் ஆலயப் பங்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிசிலியா யோசப் நேற்று (18.03.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சைமன் யோசப், அக்னஸ் யோசப் தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவரான திருமதி மரியா மின்னொளி ஜீலியன், மற்றும் கிறிஸ்ரி, அன்ரன் யோசப் அவர்களின் அன்பு சகோதரியும், திரு.பயஸ் ஆனந்தகுமார், ஜீலியன் (அகில இலங்கை சமாதான நீதவான், யாழ்ப்பாணம் மத்தியஸ்தசபை உறுப்பினர்) மங்களேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், லோயலா மனோஜ்குமார் (கனடா), ஜீலினா சுதர்சன், நிரோஜினி கிருபாகரன், சுதாகரன், சங்கீத்தன் ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.03.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு சுண்டிக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் நடைபெறும் ஆராதனையின் பின்னர் யாழ்ப்பாணம் தூய மரியன்னை பேராலயத்தின் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

819, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
பயஸ் ஆனந்தகுமார் ஜீலியன்
(மைத்துனர்)

# மரண அறிவித்தல்

## அருணாசலம் கமலாதேவி

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் கமலாதேவி கடந்த (15.03.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், கார்த்திகேசு அருணாசலத்தின் அன்பு மனைவியும், சர்வானந்தன் (சுவிஸ்), மதிவதனி (நோர்வே), சந்திரமோகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், ஆனந்தி, ராம்சங்கர், லாவன்யா ஆகியோரின் அன்பு மாமியும், சஞ்ஜெய், வர்ஷினி, உபசனா, உமாசங்கர், உவர்னா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நவமணிதேவி, இலங்காதேவி, காலஞ்சென்ற விமலாதேவி, சகுந்தலாதேவி, பூமாதேவி, உமாதேவி, தெய்வநாயகி, வள்ளிநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்லத்துரை, சண்முகரத்தினம், மாணிக்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

அருணாசலம் (கணவர் - 077 435 9565)
கண்ணன் (மகன் - 076 926 5597)
மதிவதனி (மகள் - 0047 991 24916)
மோகன் (மகன் - 0041 7873 21685)

கைதடி தெற்கு,
கைதடி.



பிறப்பு 09.04.1950

இறப்பு 15.03.2022

(cs.18918) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள்கள் தட்டுப்பாடு; தீயணைப்பு சேவை பாதிப்பு

கொழும்பு, மார்ச் 19

எரிபொருள் நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான எரிபொருள் உள்ளதால் கொழும்பு மாநகர தீயணைப்பு திணைக்களத்தின் சேவைகள் பாதிப்படைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

தீயணைப்பு ட்ரக் வாகனங்களுக்கு அவசியமான டீசல் தட்டுப்பாடே இதற்குக் காரணம் எனக் கூறப் படுகின்றது.

இது குறித்து பிரதான தீயணைப்பு உத்தியோகத்தர் பீ.டி.கே.ஏ.வில்சன் தெரிவிக்கையில்;

தற்போது கொழும்பு மாநகர எரிபொருள் நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான எரிபொருளே உள்ளது. இந்த நிலைமை தொடர்ந்தால் பெரும் நெருக்கடி நிலை ஏற்படுமென்றும் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை 2.9 பில்லியன் ரூபா செலவில் இறக்குமதி செய்யப்பட்ட 15 தீயணைப்பு ட்ரக் வாகனங்கள் மற்றும் 15 மீள்புதுப்பிக்கப்பட்ட ட்ரக் வாகனங்கள் பகிர்ந்தளிக்கப்படும் நிகழ்வு நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் காலி முகத்திடலில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-ரி1)

## கொழும்பு துறைமுக வெற்றிக்கு இந்திய முதலீடு காரணம்

கொழும்பு, மார்ச் 19

கொழும்பு துறைமுக வெற்றிக்கு இந்திய முதலீட்டாளர்களே முக்கிய மான காரணம் என்று கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சாலிய விக்ரமசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1.12 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகரம், இந்தியாவுக்கு முக்கியமான வியாபாரத் தொழில் வாய்ப்பு வசதிகளை வழங்குவதோடு இலங்கையிலுள்ள முதலீட்டாளர்களுக்கும் புதிய முதலீட்டாளர்களுக்கும் சந்தர்ப்பங்களை வழங்கவுள்ளது.

அத்துடன் துறைமுக நகரத்துக்கெனகொண்டு வரப்பட்ட தனிவேறான சட்டங்கள் இந்திய முதலீட்டாளர்களை ஆதரித்து ஊக்குவிக்கும் -என்றார். (ஓ-14,ரி1)

### கடனுக்கில்லை...

இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்த நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச நேற்று நாடு திரும்பினார். விமான நிலையத்தில் வைத்து ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே, நிதி அமைச்சர் இவ்வாறு கூறினார்.

'இலங்கைக்கு பொருளாதார மற்றும் சமூக ரீதியில் ஒத்துழைப்பு வழங்கப்படும் என இந்திய பிரதமர் குறிப்பிட்டார். அத்துடன், எமது ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் இயற்கை விவசாயம் மற்றும் புதுப்பிக்கத்தக்க மின்சக்தி திட்டம் தொடர்பில் பிரதமர் மோடி அக்கறையை வெளிப்படுத்தினார். இந்தியா வழங்கும் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனில் மருந்து, உணவு பொருள்கள் வாங்கப்படும். புத்தாண்டுக்கு எவ்வித தட்டுப்பாடுகளும் இன்றி அத்தியாவசியப் பொருள்கள் விநியோகிக்கப்படும். கடன் வழங்க இந்தியா எவ்வித நிபந்தனையையும் விதிக்கவில்லை. வங்கியில் கடன் வாங்கும்போது வட்டி, செலுத்தப்படும் காலம் உள்ளிட்ட விடயங்கள் கேட்கப்படும். அது போல்தான் இதுவும். மாறாக நிபந்தனைகள் அல்ல. மூன்று வருடங்களுக்குப் பிறகே கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும்' - என்றார். (அ-ம-44)

### பால்மா...

வாகவும் 400 கிராம் பொதியின் விலை 540 ரூபாவிலிருந்து 800 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட உள்ளது.

நுகர்வோர் விவகார இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ணவுக்கு கடந்த 7ஆம் திகதி வழங்கிய அறிவித்தலின்படி இந்த விலையேற்றம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

உலக சந்தையில் ஒரு கிலோ பால் மாவின் விலை 2.80 அமெரிக்க டொலரில் இருந்து 5.30 அமெரிக்க டொலராவும், டொலர் ஒன்றின் பெறுமதி அதிகரிப்பாலும் இவ்வாறு விலை அதிகரிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

### மண்ணெண்ணெயும்....

கடும் கண்காணிப்பின் கீழ் பகிர்ந்தளிக்குமாறு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

குடும்ப அட்டையை முதன்மைப்படுத்திய வகையில் மண்ணெண்ணெய் பங்கிடப்படவுள்ளது. இவ்வாறு பகிரும்போது விவசாயம் மற்றும் மீன்பிடி சமூகத்தின் தேவை கருதி அவர்களை முன்னிலைப்படுத்து மாறும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-ம-17)

### இலங்கைக்கு...

கப்பட்டுள்ளன என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் ஜெர்ரி ரைஸ் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கு உதவி வழங்கும் வேலைத்திட்டம் தொடர்பான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கட்டுப்பாடற்ற நோட்டுக்கள் அச்சடிப்புக் காரணமாக பணப் புழக்கத்தை குறைவாக வைத்திருக்க இலங்கை அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்கின்றது. நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச அடுத்த மாதம் வொஷிங்டன் வரவுள்ள நிலையில், அவரது இந்தப் பயணம் இலங்கைக்கு உதவுவதற்கான சிறந்த வழியைத் தீர்மானிக்கும் - என்றார். (அ-ம)

### மக்கள்...

வெளியிட்டு, இலங்கை அமைச்சருக்கு நன்றி எனத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் அந்நிய செலாவணி நெருக்கடியால் அடிப்படை வசதிகள் இன்றி இலங்கையர்கள் தவித்து வரும் நிலையில், விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச மாலைதீவுக்கு விஜயம் செய்ததன் நோக்கம் என்ன என சமூக ஊடகங்களில் பல இலங்கையர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்தநிலையில் மாலைதீவு விளையாட்டு துறை அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்ளும் நோக்கிலேயே அங்கு சென்றுள்ளதாக நாமல் ராஜபக்ச, கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

தனது மாலைதீவுக்கான விஜயம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், 'மாலைதீவில் விளையாட்டு விருது வழங்கும் நிகழ்வில் பங்கேற்பதற்காகவே ஒருநாள் பயணமாக மாலைதீவுக்குச் சென்றிருந்தேன். எனது இந்த மாலைதீவுக்கான பயணத்தால் இலங்கை அரசாங்கத்துக்கு எந்த செலவும் இல்லை. மறைந்து கொண்டு நெருக்கடியை எதிர்கொள்ள முடியாது. மாலைதீவில் அதிக வேலை வாய்ப்புகளைப் பெற வேண்டும், இலங்கை மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த இளைஞர்களுக்கு மாலைதீவு அதிகளவான தொழில் வாய்ப்புகளை வழங்குகின்றது. மக்களின் விரக்தியை நாங்கள் புரிந்துகொள்கிறோம். ஆனால் இந்த சூழ்நிலையிலிருந்து வெளியேற நாங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்' எனத் தெரிவித்துள்ளார். (அ-ம)

### வருகின்றது...

நாடளாவிய ரீதியில் எரிபொருளுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் சுழற்சி முறையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள்கள் அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நேற்று சில எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பெற்றோல் அனுப்பப்பட்டுள்ள நிலையில், பல எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு டீசல் இன்று அனுப்பிவைக்கப்படவுள்ளது. (அ-ம-17)

### தங்கம்...

லட்சத்து 60 ஆயிரம் ரூபாவாக அதிகரித்தது.

இலங்கை ரூபாவுக்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிப்பும் தங்கம் மீதான விலையில் தாக்கம் செலுத்தியுள்ளது. யாழ்ப்பாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை 22 கரட் ஆபரணத் தங்கத்தின் விலை ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 700 ரூபாவாக அதிகரித்துள்ளது.

தங்கத்தின் விலை இந்த வார ஆரம்பத்தில் ஒரு லட்சத்து 37 ஆயிரத்து 500 ரூபாவாகக் காணப்பட்டது. 24 கரட் ஒரு பவுண் தூயதங்கம் ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது. (அ-ம)

### வலி. தென்மேற்கு...

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள், எரிவாயு நெருக்கடிகளுக்கு மத்தியில் இன்று இந்த வேலையைத்தான் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நாட்டில் மக்கள் படுகின்ற பேரவலத்தை என்னால் முடிந்தவரை வெளிப்படுத்தும் வகையில்தான் இவ்வாறான கோலத்தில் இன்றைய அமர்வுக்கு நான் வந்திருக்கின்றேன்.

இந்த நாட்டினுடைய அரசாங்கம் வேறு நாடுகளுக்குச் சென்று யாசகம் எடுக்கின்றது. இந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் வீதிவீதியாகச் சென்று யாசகம் எடுக்கின்றார்கள். அனைத்து மக்களும் கோவணத்தையும் மறந்தவர்களாக நடு வீதியில் அநாதைகளாக விடப்பட்டுள்ளனர். அபிவிருத்தி என்கின்ற மாயையை கைவிட்டு மக்கள் உண்பதற்கான அரிசியைப் பற்றிச் சிந்தியுங்கள் - என்றார். (அ-ம-27)

### மினி சூறாவளி...

களில் நேற்று வீசிய மினி சூறாவளியால் பல வீடுகள் சேதமடைந்தன. இன்னபல உடமைகளுக்கும் சேதம் ஏற்பட்டது.

நேற்று இரவு வரையான தகவல் சேகரிப்பின்படி செல்வாநகர் பிரதேசத்தில் 3 வீடுகளும், கிருஷ்ணபுரம் பிரதேசத்தில் 5 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்தன. வாகனங்களுக்கு மீது மரங்கள் முறிந்து விழுந்தமையால் சில வாகனங்களும் பெரும் சேதத்துக்கு உள்ளாகின. (அ-ம-113)

### 9 மாத...

நெடுந்தீவு 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அமல்ராஜ் டென்ஜான்சிகா என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு குழந்தைக்கு காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து குழந்தையை நெடுந்தீவு மருத்துவமனைக்குப் பெற்றோர் கொண்டு சென்றுள்ளனர். முதல் கட்ட சிகிச்சைக்குப் பின்னர் குழந்தை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. எனினும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுவரும் முன்னரே குழந்தை உயிரிழந்துள்ளது. (ம-இ)

### சீனாவுக்கான...

இம்முறை செலுத்த முடியாத நிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை, சீன அபிவிருத்தி வங்கிக்கு 53.596 மில்லியன் டொலரையும், சீனா எக்சிம் வங்கிக்கு (நீர் வழங்கல் சபை) 17 மில்லியன் டொலரையும் செலுத்த வேண்டியுள்ளது. இந்தக் கடனில் ஒரு பகுதியை எதிர்வரும் 21ஆம் திகதி திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது. இந்தக் கட்டணத்தையே தற்போது செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ-ம)

### வவுனியா...

தெரிவித்தனர்.

வீடுகளில் திருட்டுகளில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த வவுனியா கூமாங்குளத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞரே இவ்வாறு தப்பியோடியுள்ளார். தப்பியோடிய கைதியைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வவுனியா சிறைக் காவலர்கள் பொலிஸாருடன் இணைந்து இந்தத் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-18)

### ஜே.வி.பியின்...

மொன்றையும் நடத்தியது.

ஜே.வி.பியின் இளைஞர் அணியான சோஷலிச இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில், 'வேண்டாம் எண்ணெய் வரிசைகள்! இந்தியாவுக்கு தாரை வார்த்த எண்ணெய் குதங்களையும், அமெரிக்காவுக்கு தாரைவார்த்த யுகதனவியையும் மீளப் பெறு!!' என வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு டெக்னிகல் சந்தியில் ஆரம்பமான பேரணி, ஜனாதிபதி செலயகம் வரை சென்றடைந்தது.

இதன்போது ஜனாதிபதியிடம் மனுவொன்றைக் கையளிப்பதற்கு போராட்டக்காரர்கள் முற்பட்டனர். எனினும், அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஜனாதிபதி செயலாளராவது வரட்டும் என போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர். எனினும், அந்தக் கோரிக்கையும் ஏற்கப்படவில்லை.

இதனையடுத்து சிலர் பலவந்தமாக உள்நுழைவதற்கு முற்பட்டனர். அவர்களை பாதுகாப்பு தரப்பினர் தடுத்து நிறுத்தினர். இதனால் சிறிதுநேரம் பதற்றநிலை உருவானது. மகஜரை ஜனாதிபதி பொறுப்பேற்காததால், அதனை தீயிட்டுக் கொளுத்தி இளைஞர்கள் எதிர்ப்பை வெளியிட்டனர். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரில்லா முறைமைக்கு புலிகள் சென்றிருந்தால் வென்றிருப்பார்கள்

## உக்ரைன் செய்யவேண்டியதும் இதுதான் என்கிறார் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா



**கொழும்பு, மார்ச் 19**

**இராணுவத்துடன் நேருக்கு நேர் சண்டையிட்டதால் தான் பிரபாகரன் தோல்வியைச் சந்திக்க நேரிட்டது என்று இலங்கையில் இறுதிக்கட்டப்போரை வழிநடத்திய இராணுவத் தளபதியான பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா சுட்டிக்காட்டியுள்ளார்.**

ரஷ்யா - உக்ரைன் போர் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே, புலிகள் அமைப்புக் குறித்தும் அவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் பொன்சேகா தெரிவித்ததாவது:

முன்பிருந்த சோவியத் ஒன்றியம்போல் ரஷ்யாவைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற கனவு புடினிடம் உள்ளது. அவர் ரஷ்யாவை பலப்படுத்தி வருகின்றார். இந்நிலையில் உக்ரைன் நேட்டோவில் இணைவது ரஷ்யாவுக்கு விருப்பம் இல்லை. அது தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என ரஷ்யா கருதலாம்.

உக்ரைனை விடவும் ரஷ்யா போர் வலிமை படைத்த நாடு. படை பலம், ஆயுதபலம் என எல்லாம் உள்ளன. எனவே, உக்ரைன் படையினர், நேரடியாக மோதினால் ரஷ்யப்படைகள் அவர்களை சின்னா பின்னமாக்கிவிடுவார்கள்.

இராணுவ பலம் குறைந்தவர்கள் கொரில்லா போர் உள்ளிட்ட தந்திரோபாயங்களையே கையாள்வார்கள். எனவே, உக்ரைன் தனது போர் அணுகு முறையை மாற்றியமைத்தால் தாக்குப்பிடிக்கலாம். ஏனெனில் வியட்நாம் போரில் அமெரிக்காவால் வெற்றிபெறமுடியாமல்போனது. உக்ரைனின் போர் அணுகு முறையை மாற்றியமைத்தால், ரஷ்யா சில பகுதிகளைக் கைப்பற்றினாலும், அந்நாட்டை முழுமையாக ஆக்கிரமிக்க முடியாமல்போகும்.

புலிகள் அமைப்பினர் போர் அணுகுமுறையை மாற்றாமல், இராணுவத்துடன் நேருக்கு நேர் சமரிட்டதால்தான், பிரபாகரன் அழிவைச் சந்திக்க நேரிட்டது. அவர்கள் சீருடையை களைந்து, மக்கள் மத்திக்குச் சென்று போர் அணுகுமுறையை மாற்றியிருந்தால் சவாலாக இருந்திருக்கும் - என்றார் பொன்சேகா.

(ஒ-44)


# சமுர்த்தி பயனாளிகளின் வர்த்தகச் சந்தை

சாவகச்சேரி மார்ச் 19

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்திப் பயனாளிகளின் உற்பத்திப் பொருள்களின் வர்த்தகச் சந்தை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மைதானத்தில் ஏப்ரல் 9 மற்றும் 10 ஆகிய திகதிகளில் இடம்பெறவுள்ளது. சமுர்த்தி அபிமானி புத்தாண்டுச் சந்தை என பெயரிடப்பட்ட சந்தையில் சமுர்த்தி பயனாளிகளால் உருவாக்கப்பட்ட ஆக்கப் பொருள்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படவுள்ளன. இதற்கான ஏற்பாட்டை பிரதேச சமுர்த்தி அலகினர் மேற்கொண்டுள்ளனர்.

(வ-9)

# கட்டணங்கள் செலுத்தத் தாமதம்; ஆய்வுகூட சேவைகள் ஸ்தம்பிதம்



கொழும்பு, மார்ச் 19

பலமாத காலமாக கட்டணங்கள் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தால் அத்தியாவசிய மருத்துவ வழங்கல் களுக்கான ஆய்வுகூடச் சேவை ஸ்தம்பிதம் அடைந்துள்ளது என மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானக் கல்லூரி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவிக்கையில்;

2022 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 4 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும் கடந்த வருடத்தில் செலுத்தப்பட வேண்டிய தொகை 10 பில்லியன் ரூபாவாக காணப்படுகிறது.

இதனைச் செலுத்துவதில் அமைச்சின் தாமதம் காரணமாக பெரும் எண்ணிக்கையான ஆய்வுகூடப் பரிசோதனைகளும் அத்தியாவசிய சுகாதார சேவைகளும் நிறுத்தப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

நல்ல நிலையிலுள்ள ஆய்வுகூட உபகரணங்கள் கழிவென்று விலக்கப்பட்டு பில்லியன் கணக்கில் பெறுமதியான உபகரணங்கள் தரகுக்கூலிக்காக இறக்குமதி செய்யப்படுகின்றன.

ஒரு சோதனைக்கான ஆகு செலவை கட்டுப்படுத்தினால் இந்தக் கடன் சுமையிலிருந்து விடுபடலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

(ச-இ)

# நட்பு உல்லாசப் பயணிகள் சேரிடமாக சிகிரியா பிரகடனம்

சூழலியல் நட்பு உல்லாசப் பயணிகள் சேரிடமாக சிகிரியா பிரகடனப்படுத்தப்பட வுள்ளதென்று உல்லாசப் பயணத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்; உல்லாசப் பயணத்துறை அமைச்சு உல்லாசப் பயண அபிவிருத்தி அதிகார சபை ஆகியவை மத்திய கலாசார நிலையம், வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன. அத்துடன் சிகிரியா வலயத்துக்கு உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு அவசியமான வசதிகளை செய்வதற்கான நடவடிக்கையையும் அரசு எடுத்து வருகின்றது - என்றார்.

(ஒ-14, சி)

**EDUS | Online Institute**
with GLOBAL STANDARDS
சிறந்த ஒன்லைன் கல்விக்கான நிரந்தர தீர்வு!
தரம் 1 தொடக்கம் A/ L
(English & Tamil Medium)
Professional courses for beginners
Admissions Open...!
www.edus.lk 077 712 3330

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ். கைதடி தெற்கில் விக்னேஸ்வரா வித்தியாலயம் அருகாமையில் 12 பரப்புக் காணி 2 ப்ரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
❖ கைதடி சந்தியில் இருந்து 600m தூரத்தில்
❖ நல்ல சூழலில்
❖ கைதடி சந்தி (A 09 றோட்) பெற்றோல் நிரப்பு நிலையம் அருகாமை வீதியில்
தொடர்பு : 074 291 3725 /074 291 3726

**விற்பனைக்கு**
ஜேர்மன் செப்பேட் நாய்குட்டிகள்
விற்பனைக்குண்டு. தடுப்பூசி போடப்பட்டது.
077 569 7715, 076 618 6824

**சிறுநீரகம் தேவை**
O⁻ குறூப் வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
(CR8118)1-6
077 797 0827 / 076 928 1986

**காணி விற்பனைக்குண்டு**
Star Food City இல் இருந்து 500m தூரத்தில் கொக்குவில் கிழக்கில் 01 பரப்பும் 1.03 குழி உடைய காணி வெட்டு கிணறும் மற்றும் சுற்றுமதிலுடன் விற்பனைக்குண்டு.
075 049 8296

**கல்வி நிலைய தளபாடங்கள் விற்பனைக்கு**
பின்வரும் தளபாடங்கள்
மலிவு விலைக்கு விற்பனைக்குண்டு
- Toshiba 2309 A photocopier
- CCTV Camera
- Multy media Projector
- கல்வி நிலைய மேசை, வாங்கு
- அலுவலக மேசைகள்
- Computer மேசைகள்
- Double bed with mattresses
- இரும்புக் குழாய்கள்
077 734 2770

**நன்றி நவில்கின்றோம்**



கடந்த (06.03.2022) ஞாயிற்றுக்கிழமை முருகன் திருவடி சென்றடைந்த எமது தந்தையாரும் பறாளை முருகன் ஆலய பரம்பரை குருவுமாகிய

**பிரம்மஸ்ரீ மு. பாலகுருசாமிசர்மா**

**குறிப்பு - எதிர்வரும் 20.03.2022 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணி முதல் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன உபசார நிகழ்வில் கலந்து சிறப்பித்து அன்னாரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தனை செய்யுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.**

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அவர்களின் இறுதிக்கிரியைகளின் போது எமக்கு நேரிலும் தொலைபேசி மூலமாகவும், சமூக வலைத்தளங்கள் மூலமாகவும், ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள் அனுப்பி வைத்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை தயாரித்து அனுப்பியவர்களுக்கும் மற்றும் எம்முடன் தோளோடு தோள் நின்று சகல விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கிய தொண்டர்கள், அன்பர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் எமது நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்கிறோம்.

குடியிருப்பு,
சுழிபுரம்.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.